497

தமிழ்க்கலை

தமிழ்க்கலை

திங்கள் வெளியீடு

உள் நாடு:

தனிப்படி 0—4—0

ஆண்டு வரி
பொங்கல் மலருடன் 3-8-0

வெளி நாடு:

தனிப்படி 0—5—0

ஆண்டு வரி
பொங்கல் மலருடன் 5-0-0

தனிப்படிகள் சுதேசமித்திரன், ஹிகின்பாதம் ரெயில்வே புத்தகசாலைகளிலும், முக்கிய ஊர்களில் உரிமை பெற்ற விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

விளம்பரம்

ஒரு முறைக்கு

வெளிப் பக்கம் (அட்டை)	ரூ. 100
உள் பக்கம் (,,)	75
சாதாரண பக்கம்	50
,, ½ பக்கம்	30

நீண்டகால விளம்பரத்துக்கு நேரில் எழுதவும்.

பொறுப்பாளர்:

'தமிழ்க் கலை'

34, வைத்தியநாத முதலிதெரு,
சென்னை 10.

தமிழ்க்கலை

ஆசிரியர்
அ. மு. பரமசிவானந்தம் B.O.L., M.Litt.

*விரியும் அறிவு நிலை நாட்டுவீர் - அங்கு
வீழும் சிறுமைகளை ஓட்டுவீர்—பாரதி.*

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯

1 — 11 — '48

கலை - 6 ✻ **நூல் - 5**

பொருளடக்கம்

நகரசபைத் தேர்தல்	3
வாழ்க 'கலை மருத்துவர்'	4
கல்வி அமைச்சர் கருத்துக்கு	5
வாக்காளர் பதிவு	6
அக்டோபர் - 24	7
தமிழர் வாழ்க்கை	9
தமிழ்நாடும் சென்னையும்	17
மீன் பிடித்தல்	23
முதியோர் இருவர்	26
புரட்சி	31
அந்தத் தொடக்க நாளில்	32
அதோ போகிறாள்	42
சிறுகதைப் போட்டி	47
மதிப்புரை	48

கலையில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியாகார்.

CP/274

குதூகலம் குழந்தைகளுக்கு

குழந்தைகளின் மனோ தத்துவங்களை ஆராய்ந்த அறிஞர் உடைகளும் கூட அவர்களின் மனோ வளர்ச்சியையும் நிலையையும் பாதிக்கின்றன எனக் கூறுகின்றனர். பள்ளி வகுப்பிலும், பந்தடி மேடையிலும் உத்ஸாகத்தையும், சௌகரியத்துடன் சந்தர்ப்பப் பொருத்தத்தையும் அளிப்பதே சரியான உடையாகும். சிறுவர்களுக்கென தயாராகும் எங்கள் கைத்தறி ஆடைகள் இக் குண விசேஷங்களை அடிப்படையாகக் கொண்டவை.

எங்கள் கைத்தறி ஜவுளிகள் சென்னையிலும் இதர முக்கிய நகரங்களிலும் உள்ள எம் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்

"ஹாலோவேஸ் கார்டன்ஸ்", 34, பாந்தியன் ரோடு, எழும்பூர், மதராஸ்

நகர சபைத் தேர்தல்

சென்னை நகரசபைத் தேர்தல் முடிந்து விட்டது. பலர் எண்ணிய கோட்டைக ளெல்லாம் சரிந்து வீழ்ந்தன. தமக்கே உரிமையாக்கிக் கொண்டு நகர சபையில் உறுப்பினராயிருந்த பலர் இதில் வீழ்ச்சியுற்றனர், பல புதிய அங்கத்தவர்கள் இன்று இடம் பெற்றுள்ளனர். அனைவரும் ஒன்றுகூடி, கட்சி வேறு பாடற்று நகரமக்களுக்குப் பணியாற்ற வேண்டுவது அவர்தம் கடன்.

தேர்தலில் பல நாடகங்கள் நடைபெற்றன. காங்கிரஸ் கட்சி தேர்தலில் தலை இடவில்லை. என்றாலும் தமிழ் நாடு எல்லைக்கமிட்டி என ஒன்று முன்பின் அறியாநிலையில் வந்து தானாகத் தலையிட்டது வருத்தத் தக்கது. தமிழ் நாடு பிரிய வேண்டும். அதுவும் சென்னை யைத் தலை நகராகக் கொண்டு வேங்கடம் குமரியிடைப் பட்ட தமிழ் நாடாக இருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் பலர் முயன்று வருகிறார்கள். ஒரு முயற்சியும் செய்யாது, பேருக்கு எல்லைக் கமிட்டி என ஒன்றை உண்டாக்கிக் கொண்டு, தான் நகர சபைக்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கப் போவதாகச் சொல்லிப் பல பிரிவுகளுக்கு, நின்றவரில் ஒவ்வொருவரைப் பொறுக்கி எடுத்தது. அதை நம்பி நின்ற உறுப்பினர்களில், ஒரு சிலர் தவிர. தம் சொந்த உழைப்பால் வெற்றி பெற்றவர் தவிர, மற்றவர் பெரும்பாலும் தோல்வியுற்றனர். இந்தச் செயல் கண்டு சென்னையில் தமிழர் பெரும்பாலராக இல்லை என்று யாரும் முடிபு செய்யமாட்டார்கள். சென்னை வாழ் தமிழர் 'மதராஸ் மனதே' என வாய் வீரம் பேசிய அத்தனைபேரையும் மண் கௌவச் செய்து தமிழ் நாட்டுத் தலைநகர்தான் சென்னை என்பதை நிலை நாட்டி விட்டனர். ஒரு சிலர் முன்னே 'மதராஸ் மனதே' என்று சொல்பவ ரோடு சேர்ந்திருந்தாலும், அவர்கள் தேர்தலில் தெளிவாகச் சென்னை தமிழருடையதே என்று சொன்ன காரணத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டனர். எனவே, இன்றைய நகர சபையில் - 70 பேருள்ள நகர சபையில் - இரண்டொருவர் தான் ஆந்திரர்; மற்றவர் அனைவரும் தமிழர்களே!

'ஆல்டர்மென்' தேர்தலிலும் அதே காட்சி கண்டோம். வந்த ஐவரில் ஒரு மலையாளி போக மற்றவர்கள் தமிழர்களேயாவர். எனவே இந்தத் தேர்தல் திட்டமாகச் சென்னை நகரம் தெலுங்க ருடையதன்று, நூற்றுக்கு நூறு தமிழருடையதே என்பதைத்

திட்டமாக விளக்கி விட்டது. இனியாவது நமது ஆந்திரத் தோழர்கள் உண்மை உணர்ந்து சென்னையைப் பற்றிய பேச்சை விட்டுத் தமக்கு உண்மையில் உரிய எல்லையை வகுத்துக் கொள்ள வழிதேடுவார்களாக! புதிதாகவந்த தமிழ் உறுப்பினர்களுக்குப் பல வேலைகள் காத்துக் கிடக்கின்றன. முறையாகச் செய்ய வேண்டிய வேலைகள் பல. அவை நடப்பதுடன் நகரில் தமிழ் மணம் வீசுதற்கேற்ற வழிகளைக் கண்டு ஆவன செய்ய வேண்டும். பல தெருப் பெயர்களைத் தமிழ்ப் பெயர்களாக மாற்ற முற்படவேண்டும். நகரப்பள்ளிகளில் தமிழ் வளர வழிகள் வகுக்க வேண்டும். தமிழர் நலனும், அதே சமயத்தில் மற்றவர்தம் நலனும் வளர வேண்டிய வழிகளில் பாடு பட வேண்டியது அவர்தம் கடமை என்பதை வற்புறுத்துகின்றோம். சிறக்க, அவர்களுக்குள் எத்தகைய கட்சி வேறுபாடுமின்றி, நகர முன்னேற்றத்திற்காவன வெல்லாம் செய்து அவர்கள் காலத்தில் நகரம் இன்னின்ன வகையில் முன்னேறியது என்பதைத் திட்டமாகச் செயலளவில் காட்டவேண்டும். காட்டுவார்கள் என எண்ணுகின்றோம்! சிறக்க அவர்தம் பணி!

வாழ்க 'கலை மருத்துவர்'

சென்னைப்பல்கலைக் கழகத்தே ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிக் கலைமருத்துவர் (Doctor of Philosophy) என்ற பட்டம், தமிழ்த் துறையில் முதன் முதலாகப் பெற்றவர் நமது பேராசிரியர் மு. வரதராசனர் அவர்கள் ஆவார்கள். அவர்தம் எழுத்துத்திறனும் சொல்லாற்றலும் தமிழ் நாடு நன்கறிந்தனவாகும். இன்று அவர் சென்னைப்பல்கலைக் கழகத்தே தமிழ்த்துறைப் பகுதியில் தலைமை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். தமிழ் நாட்டிலேயே தமிழ்த் துறையில் முதன் முதலாகக் கலை மருத்துவரானவர் டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களாவர். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே அப்பட்டம் பெற்றவர். தற்போது அங்கே சிறந்த பணியாற்றிவருகின்றார். பல்கலைக் கழகத்துணை வேந்தராகச் சிலகாலமாக இருந்து தொண்டாற்றுகின்றார். தமிழ் நாட்டுப்பல்கலைக் கழகங்கள் இத்தகைய கலை மருத்துவர் கையில் தான் ஒப்படைக்கப்பட வேண்டும். அங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவர்தம் தலைமையையே நிலைத்த தலைமையாகக் கொள்ளவேண்டும். அதேபோல் மற்றொரு தமிழ்ப்பல்கலைக் கழகமாம் சென்னைக் கழகமும் நம் கலை மருத்துவரைத் தலைவராகக் கொண்டு பணியாற்ற வேண்டும் என்பது நம் அவா! வாழ்க கலை மருத்துவர்!

கல்வி அமைச்சர் கருத்துக்கு!

தமிழ் நாட்டில் தமிழ் முதல் மொழியாக்கிய பெருமை நம் அமைச்சர் அவர்களுக்கு உரியது. என்றாலும் அம்முதன் மொழி எவ்வாறு கையாளப்படுகிறது என்பதையும் அவர்கள் காணல் கடமையாகும். ஆங்கிலம் முதன்மொழியாக இருந்த காலத்தே அதற்கென வாரத்திற்கு 8 பிரிவுகளுக்குக் குறையாது இருந்தன. இன்று தமிழுக்கு - முதன் மொழியான பிறகு பல இடங்களில் நான்கு பிரிவுகள் தான் இருக்கின்றன. ஆங்கிலத்துக்கும், இந்திக்கும் இருக்கும் அதே நான்கு பிரிவுகள் முதன் மொழிக்கு அதுவும் தாய் மொழிக்கு இருக்குமானால் அம்மொழி வளர இடம் எங்கே? பலவிடங்களில் நேரில் சென்று கேட்டபோது தமிழ் நாட்டுப் பல பள்ளிகளில் தமிழுக்கு முதலில் எட்டு பிரிவு ஒதுக்கினார்கள் என்றும், பிறகு இந்திக்கு அதில் நான்கு எடுத்துக்கொண்டார்கள் என்றும் கூறினார்கள். எங்கோ ஒன்றிரண்டிடங்கள் 5 அல்லது 6 பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் தமிழ் முதன் மொழியாகாத அந்தக் காலத்தில் எங்கும் 6 பிரிவுக்குக் குறைந்து இருந்ததில்லை. தமிழ் முதன் மொழி என்றால் குறைந்தது எட்டுப் பிரிவாவது இருக்கவேண்டும். பிரிவை மட்டும் அதிகமாக்குவதில் பயன் இல்லை. அதற்கேற்பப் பாடதிட்டத்தையும் மாற்றி அமைக்க வேண்டும். பழையதிட்டத்தில் அப்படியே பாடங்களை அமைத்தல் தவறாகும். எனவே விரைந்து அடுத்த ஆண்டு தொடக்கத்துக்குள் முதன் மொழியின் நேரத்தையும் பாடத்தையும் திட்டமாக வரையறுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

பிற்க; தமிழ் நாட்டில் திருக்குறள் கட்டாயம் பயிற்றப்பட வேண்டும் என்று கல்வி மந்திரியார் ஆணைத்தந்துள்ளார். ஆனால் பல பள்ளிகளை அக் கட்டாயம் கட்டுபடுத்த வில்லை. பல விடங்களில் திருக்குறள் சொல்லித் தருவதே இல்லை. சில இடங்களில் சொல்லிக் கொடுப்பதாக இருப்பினும் அப்பகுதி தேர்வுகளுக்கு வைக்கப்படுவதில்லை. எனவே, அதை மாணவர்கள் விரும்பிப் படிக்கவில்லை. ஆகையால் திருக்குறள் கட்டாயம் என்பது பெரும்பாலும் எழுத்தளவிலேயே உள்ளது. கல்வி அமைச்சர் அவர்கள் இதையும் கவனித்து உடனே திருக்குறளை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயமாக்குமாறும் அதைத் தேர்வுப்பகுதியுடன் சேர்க்குமாறும் ஆணையிட்டு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சித்தூர்ப்பகுதியில் மற்றொரு வகை மாறுபாட்டைக் காண்கின்றோம். சித்தூர் மாவட்டத்தில் உள்ள பல பள்ளிகளில் தமிழ் மாணவர் அதிகமாகப் பயில்கின்றனர். அவர்களுக்கு முதன் மொழி தமிழாக இருக்கவேண்டும் என்பதில் மாறுபாடு இல்லை. என்றாலும் சில பள்ளிகளில் தலைமை ஆசிரியரும் பிறரும் அனைவரையும் தெலுங்கை முதன் மொழியாகக் கற்கவேண்டும் என

வற்புறுத்துவதாக அறிகின்றோம். அதற்காக இந்த ஆண்டு இரண்டாவது மொழியாகத் தெலுங்கைக் கட்டாயம் பயிலவேண்டும் எனவும் மாணவர்களை வற்புறுத்துகின்றனர். மாணவர் இரண்டாவது மொழியாக 'இந்தி'யைப் பயிலவேண்டும் எனக் கூறிவேண்டினும், அவர்கள் மறுக்கப்பட்டுத் தெலுங்கையே பயிற்றப்படுகின்றனர். இந்த ஆண்டு அவர்கள் இரண்டாம் மொழியாகத் தெலுங்கு பயின்று அறிவார்களாயின், அடுத்த ஆண்டு அவர்களுக்கும் தெலுங்கை முதல் மொழியாக்கலாம் என்ற திட்டத்தோடு வேலை செய்வதாக அறிகிறோம். 'இந்தி' அங்கு தள்ளப்பட்டு, தமிழ் மாணவர் தலையில் முதன் மொழியாகத் தெலுங்கையும் புகுத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அமைச்சர் அவர்கள் இத்தகைய மாறுபாட்டுச் செயலையும் ஆய்ந்தறிந்து, சித்தூர் தமிழ் மாணவர்களுக்குத் தமிழே முதன் மொழியாக இருக்கும் வகையில் உதவி புரிய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வாக்காளர் பதிவு

இந்திய அரசியல் அமைப்புமுறை உருவாகிவருகின்றது. அடுத்த கூட்டத்தில் திட்டமாக முடிவு செய்யப்பெறும். என்னென்ன வகையில், எவ்வெவ்வாறு மாற்றங்கள் பெற்று அது வெளிவரும் என்று தற்போது திட்டமாகக் கூறமுடியாது எனினும் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. அந்தக் கணக்கிலேயே அடுத்த தேர்தல் நடைபெறும் என்பது உறுதியாயிற்று. இந்த நிலை மகிழ்ந்து வரவேற்கத் தக்கதே யாகும். எனினும் வாக்காளர் பதிவுகள் சரியாக நடைபெறவில்லை என்பது பலரும் ஒரு முகமாகக் கூறும் குறைபாடு. பல மக்கள் விடப்பட்டார்கள். 14 லட்சம் மக்கள் உள்ள சென்னையில் 21 வயதுக்குட்பட்டார் பாதிபேராவது-7 லட்சம் வாக்காளர்களாவது சேர்வார்கள். ஆனால் கணக்கில் 4 லட்சமே காட்டப்படுகிறது. மற்ற மூன்று லட்சம் மக்கள் கணக்கெங்கே! கணக்குக்கென ஒதுக்கிய நாட்கள் போதா! பின் சேர்வதற்கு என விதித்த காலமும் போதாது இன்னும் கால நீட்டிப்பு வேண்டும் எனப் பலர் விழைந்தனர். நகர சபையும் அதை வற்புறுத்தியது. நவம்பர் 7 ம் தேதிவரை நாளும் நீட்டிக்கப்பட்டது.

மற்றும், இந்த வாக்குரிமை வீடுடையவர்களுக்குத்தான் என்றும், வீடற்ற மற்றவர்களுக்குக் கிடையாதென்றும் கூறப்படுகின்றது. சென்னையில் பல பாட்டாளிமக்கள் விண்ணே கூறையாக மண்ணே பாயலாக வாழ்கின்றார்கள். அவர்களுக்கு வீடில்லாதது அவர்கள் குறையன்று. பொதுமக்கள் குறை, அரசாங்கத்தின் குறை. இக்குறைக்காக அவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பின் அதைவிடக் கொடுமை கிடையாது. ஆகவே இத்துறையிலும் அரசாங்கம் கவனித்து வயது வந்தவர் அனைவரும் வாக்குரிமை பெற வழி வகுக்க வேண்டும்.

அக்டோபர்—24

அக்டேபர் 24 ஐக்கிய நாடுகள் தினமாகப் போற்றப்பட்டது. இந்திய அரசாங்கத்தார் அந்நாளை ஐக்கிய நாடுகள் ஒற்றுமை நாளாகக் கொண்டாட வேண்டுமென அறிக்கை விட்டுள்ளனர். ஐக்கிய நாடுகளின் பேரவை சென்ற ஆண்டு அக்டோபர் 30-ம் தேதி உலகநாடுகள் அனைத்தும் இந்நாளைக் கொண்டாட வேண்டும் என்னும் முறையில் ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஐக்கிய நாடுகளின் எழுத்துகளில்-பிரகடனங்களில் 1945 அக்டோபர் 24ல் எல்லா நாடுகளும் கையொப்பமிட்டன.

ஒரு தலைமுறையில் இரண்டு பெரும் போர் கண்ட உலகத்துக்கு உலகநாடுகள் ஒன்றாகாதா என்ற உணர்வு தோன்றுவது இயற்கை. அந்த உணர்வில் உருவானதுதான் ஐக்கிய நாடுகள் சபை. உலகில் என்றும் நிலைத்த சமாதானமும் நேர்மையும் நிலவ வேண்டும் என்ற அடிப்படையில் அதன் அமைப்பு அமைக்கப்பட்டது. 24-10-45 ல் எல்லா நாடுகளும் அதில் கையொப்பமிட்டன. ஆண்டுகள் மூன்றாயின. ஆனால் அச்சபையின் செயலை வல்லரசுகள் மட்டுமன்றி மற்றவரும் பொருட்படுத்துவதாகக் காணோம். அதே 24 ல் இங்குவந்த பாலஸ்தீனச் செய்தி நம்மைத் திடுக்கிடச் செய்கிறது. ஐக்கிய நாடுகள் யுத்த நிறுத்தம் வேண்டும் என்று தெரிவித்தும் அங்கு பாலஸ்தீனத்தில் இருசாரரும் போர் தொடங்கியுள்ளார். இன்னும் சில நாடுகள் அச்சபையை விட்டு விலக முயல்வதாகவும் அறிகிறோம். எனவே உலகம் அந்நாளைக் கொண்டாடுவதில் உண்மையில் பொருள் சிறக்கவில்லை. இது ஒரு சர்வதேசசங்கமாகிப் பயனற்றுப் போகாது உண்மையிலே அடுத்த போரை வரவொட்டது வழி தேட முயல வேண்டும். முயலலாம் மன மிருந்தால்! அதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் தம் சுயநலத்தை முழுதும் இல்லா விட்டாலும் சிறிதளவாவது விட்டுக் கொடுத்தால் செய்ய முடியாத காரியங்களைச் செய்து காட்டலாம். அங்கு உறுப்பினர்கள் மனம் வைக்க வேண்டும். அடுத்த அக்டோபர் 24க்குள் என்னென்ன நடக்குமோ பொறுத்துப் பாரப்போம்!

நிற்க, நம் நாட்டிலும் அக்டோபர் 24 ஒரு முக்கிய இடம் பெற்று விட்டது.

தமிழ்நாட்டு எல்லையிலும் பிறபகுதிகளிலும் உள்ள பிரெஞ்சிந்தியத் தேர்தல் நடைபெற்ற நாள் இந்த 24 தான். இந்தத் தேர்தல் முடிவுதான் அப்பகுதிகளை இந்தியாவோடு இணைப்பதா அன்றித் தனியே இருப்பதா என்பதை வற்புறுத்தும் என்ற வகையில் நடைபெற்றது. மாஹியில் மக்கள் கிளர்ச்சி ஒருபுறம் இருப்பினும் பிறபகுதிகளாகிய புதுச்சேரி, காரைக்கால் ஆகிய

வற்றில் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பல கட்சிக்காரர்கள் பங்கு கொண்டனர். இந்தியநாட்டொடு இணைக்க வேண்டுமென்ற கொள்கையுடையார் ஒருபுறமும், அல்லாதார் மற்றொரு புறம் போட்டி இட்டனர். இந்தத் தேர்தல் முறையிலே பல தவறுகள் இருந்த போதிலும் பெரும்பாலும் வரும் உறுப்பினர் தம் நிலை ஒட்டியே அப்பகுதிகள் இந்தியாவோடு சேர்தல் அமைகின்றது. எனவே இந்தியாவின் பகுதியில் இருந்து கொண்டு இன்னும் அதனோடு இணைக்கப்படாத கடைசி நிலப்பிரிவுகள்-பிரஞ்சிந்தியப் பகுதிகள் இந்தியாவோடு இணைவதற்கான திட்டம் தீட்டப்பட்ட நாள் இது.

இன்னும் அகில இந்தியா காங்கிரஸ் தலைவர் தேர்தலும் இந்த 24லேயே! வடக்கா தெற்கா என்று வராத உள்ளத்தில் எல்லாம் உணர்ச்சிவளரப் போரிட்டு முடிபுகண்ட நாள் இது. தோழர்கள் புருஷோத்தமதாஸ் டாண்டனும், டாக்டர். பட்டாபியும் காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கு நின்றனர். தென்னாட்டுத் தலைவர்களும், இதழ்களும் ஒருமுகமாக தென்னாட்டார் தலைவராக வந்து பல ஆண்டுகள் ஆயினமையின் பட்டாபியே வரவேண்டும் என எழுதிப் பேச, பெற்ற முடிபும் அவர்தம் விருப்பப்படியாயிற்று. தென்னாட்டவர் சிறப்பாக சென்னைமா நிலத்தவர் தம்தம் சிறு வேறுபாடுகளை யெல்லாம் மறந்து, வடக்கு தெற்கு என்ற ஒன்றையே உளத்தில் வைத்து பட்டாபி வெற்றிபெறப் பாடுபட்டமை போற்றற்குரியது. பட்டாபி தோண்டர் - உழைப்பாளி என்ற முறையில் வெற்றிபெற்றார் என்று வடநாட்டவர் தற்போது பேசினாலும், பட்டாபி வெற்றி தென்னாட்டவர் வெற்றியே என்பதில் ஐயமில்லை. அவர் தலைமையில் காங்கிரஸ் பணி சிறப்பதாக!

நிற்க, அதே 24ல் தமிழர் கூட்டம் ஈரோட்டில் திரண்டு நின்றது. இனி தமிழ் நாட்டில் தமிழ் மக்களுக்குத் தேவையானவை எவை எவை என ஆராய்ந்தது. ஈரோடு தனி மாநாடு பலவகையில் முக்கிய இடம் பெறுகிறது. இந்திப் போராட்டம் மட்டும் மாநாட்டுத் தீர்மானம் அன்று. காங்கிரஸ் தலைவர் தேர்தலிலே வடக்கு தெற்கு விளக்கமாயிற்று. அத்துடன்னில்லாது மக்கள் வாழ்க்கை முறையிலேயே வடக்கு தெற்கு வேறுபாடு அமைகின்றமையின் வடக்கும் தெற்கும் பிரிய வேண்டும் என்பதை வற்புறுத்தியது அந்த மாநாடு. வடநாட்டு ஆதிக்கம் இங்கு அதிகமாகின்றது. வடநாட்டு ஆட்சி தென்னாட்டவரை அடக்குகின்றது. வடநாட்டு முதலாளி தென்னாட்டுச் செல்வத்தை சுரட்டுகிறான். இவற்றையெல்லாம் நீக்க, நேரிய வழியில் போராட்டத் திட்டம் தீட்டிய நாள் இந்த அக்டோபர் 24தான். அவர்தம் திட்டங்கள் செயலில் சிறந்து, நாட்டுக்கு நலம் தருவதாக!

தமிழர் வாழ்க்கை

(அ. மு. ப. சிங்கப்பூர் நகரத்தார் கோயிலில்
ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்)

வாழ்வு என்பது உலகில் பிறந்து மொழிபயின்று பின் காதல் சிறந்து, கருத்து நிறைந்து வாழ்வதுதான் என்பது அனைவரும் அறிந்தது. உலகில் எத்தனையோ கோடி உயிர்கள் பிறந்து இருந்து வாழ்கின்றன. அவற்றுள் மனிதன், தான் வாழும் வாழ்க்கையை எண்ணி இயங்கும் வகையில் அறிவு பெற்றிருக்கிறான். பிற உயிர்கள் ஏதோ பிறந்து இருந்து வாழ்கின்றன என்ற அளவில் நீங்கும் காலை, மனிதன் தன் பகுத்தறிவு கொண்டு, ஏன் பிறந்தோம் எப்படி வாழ வேண்டும் என்பதை யெல்லாம் சிந்திக்கத் தொடங்குகின்றான். அவன் சிந்தனைத்தேர் சேணெடுந் தூரஞ் செல்லும். அவனது அறிவின் முதிர்ச்சியிலே அவன் கண்ட உண்மைகள் பலபல! பிறப்பின் பயன் என்னவென்று ஆராய்ந்தான். ஆராய்ச்சி முடிவில் அறிந்தன பல! அந்த ஆராய்ச்சித் துறையில் - அறிவுத் துறையில் தலை நின்றவன் தமிழன்.

இன்று தமிழன் வாழ்க்கை வரண்ட வாழ்க்கையாகக் காண பட்டாலும், அடிமை வாழ்க்கையில் அவன் அல்லலுற்றாலும் அன்று ஒரு நாள் அவன் உலகத்துக்கே வழிகாட்டியாக இருந்தான். உலகம் அவன் அடிசுற்றி நின்றது. இன்றும் அவன் அடிசுற்றி நின்றது. இன்னும் அவன் காட்டும் வாழ்க்கை நெறியினை உலகம் பின் பற்றுமாயின் நாட்டில் எழும் கொந்தளிப்புகள் இல்லையாகும். உலகம் உயர்வுறும். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ் நாட்டை நோக்குவோமானால் தமிழன் வாழ்ந்த வாழ்க்கை கண்முன் தோன்றும்.

வாழ்க்கை கரடு முரடானது தான். என்றும் வாழ்க்கைப் படகு இன்பத் தோணியாகக் காட்சியளிக்காது. இன்பமும் துன்பமும் இணைந்து வருவதேதான் வாழ்க்கை. நலன் தீங்குகள் மாறி மாறி வருவது தான் வாழ்க்கை. ஆகவே தமிழன் சிறக்க வாழ்ந்தான் என்றால் அவன் வாழ்க்கை படகு முழுவழியும் இன்பத் திரையில் ஊர்ந்த தென்றோ, அவன் வாழ்வில் நலமன்றித் தீங்கு கண்டறிய முடியா தென்றோ நாம் சொல்லவில்லை. அவனிடத்திலும் சில குறை படிருந்திருக்கலாம். ஆனால் நடுநின்று ஆராயின், அவன் வாழ்ந்த வாழ்வின் குறை நீங்கிக் குணங் கொள்ளின், அவனது வாழ்வு மற்றவரினும் சிறந்ததாக உலகம் பின்பற்ற உதவுவதாக அமையும் என்பதை அறிவர். அவன் வாழ்வில் வழுக்கி வீழ்ந்த இடங்கள் சில. அவ்வழுக்கல் வாழ்க்கையிலும் ஒழுக்க நெறிநின்ற உயர்வு அவனிடம் காணல் இயல்பு!

தமிழ் நாட்டில் இருக்கும் நீதி நூல்களை ஆராயின், அந்த அளவுக்கு நீதிநூல்கள் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்பதைத் திட்டமாக உணர்ந்தறியலாம். 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்பது தொல்காப்பியம். இதை எண்ணும் சிலர் இத்தனை நீதி நூல்கள் உண்டாவதற்குக் காரணம் நாட்டில் மக்கள் வாழ்வு நலிவுற்றதே என்று எண்ணுவர். கூறுவர்கூட. ஆனால் நாட்டு வரலாற்றைக் காணின் அத்தகையை எண்ணத்துக்கு இடமில்லை. சூரியன் ஒருவனே யாயினும் அவன் சிறப்பை விளக்கற்கு செஞ்ஞாயிறு என்று அடை கொடுத்துச் சிறப்பிப்பது போன்று, தமிழர்வாழ்க்கை நன்றாயினும் அதற்கு மேலும் நலம் பெற வழிகள் இவை இவை யென வகுத்தன அவை. எனவே வாழும் வகை யறிந்து வாழ்க்கை முறையை மேலும் சீராக்க எழுந்தனவே நீதிநூல்கள். மேலே கண்ட படி முற்றும் செம்மை வாழ்வாக இல்லாது சிலசில இடங்களில் சிதறிய வாழ்விடை சிக்கிய போதிலும், தமிழன் தளரா உள்ளத்தோடு, தழைத்த வாழ்வில் தான் வாழ்ந்து வந்தான்.

தமிழ் நாட்டில் நீதிநூல்கள் தோன்றிய காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னரே யாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்க மருவிய நூல் என்று பேசப்படினும் அவற்றுள் பெரும்பாலான மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டன என்று கொள்ளுதல்தான் பொருத்தமானதாகக் காண்கின்றது. எனவே நீதிநூல்கள் உண்டாவதன் முன் நாட்டில் அறத்தாறு அறிவுறுத்தும் ஆசிரியர்கள் இல்லையோ என எண்ணற்க. நீதிநூல்களுள் ஒன்றாய திருக்குறள் சங்ககால இறுதியிலேயே உண்டானது. அதில் குறிப்பிட்ட அறவாழ்வு எக்காலத்துக்கும், எந்நாட்டுக்கும் ஏற்புடைத்து என உலக அறிஞர் ஒருமுகமாக உரைக்கின்றனர். அக்குறள் மட்டும் அல்லாது சங்ககால நூல்கள் பலவற்றுள்ளும் வாழ்க்கையை விளக்க முற்படுகின்றனர் அறிஞர்.

தமிழன் இலக்கியம் வேறு வாழ்க்கை வேறு என்று வாழவில்லை. சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று வாழவில்லை. அறம் வேறு வாழ்க்கை வேறு என்று கருதவில்லை. ஆம்! வாழ்வோடு இயைந்தன தாம் அறமும், சமயமும், இலக்கியமும் என்பதை அவன் அந்த நாளில், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நன்கு அறிந்திருந்தான். சங்க இலக்கியங்களைப் பயில்வோர்க்கு அத்தமிழனது பண்டை வாழ்க்கை நன்குபுலனாகும். இன்று உலகைப் பல வகையில் பாழ்படுத்தி வரும் கொடுமைகள் நீங்க வேண்டும் என அன்றே கூறினான் தமிழன். உலக அமைதிக்கு வேண்டுவன எவை எவை என இன்று ஆராய்ச்சியாளர் ஆய்ந்து காணும் முடிபினை அன்றே வாழ்விடைக் கண்டான் தமிழன். கண்டு போற்றினான். போற்றுவதோடல்லாது வாழ்விடை வாழ்ந்தும் காட்டினான்

அவன் வாழ்வில் அடிப்படையாகக் கொண்டது ஒருமை மனப்பான்மையே! உலகில் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தம்மினும் வேறுபட்டவர் என்ற கருத்து அவன் உள்ளத்தில் அன்று

தோன்றவில்லை. கருத்து வேறு பாட்டிற்கும், பிற எல்லா மாறு பாட்டிற்கும் இடையில் தமிழன் ஒருமை உணர்வை வளர்த்தான். சிறு சிறு கருத்து வேறுபாடுகளுக்காக ஒரு குடிப்பிறந்த உடன் பிறந்தவரே தம்முள் மாற்றுபட்டு நீதிமன்றம் ஏறி நெடும் பொருள் பறிகொடுத்துப் பாழ்பட்டும் நிற்கும் நாளில் அத்தமிழன் கண்ட பரந்த வாழ்க்கை நிலை சற்று விந்தையாகத் தோன்றும். ஆனால் அவன் கண்ட அந்த ஒருமை உணர்வு உலகிடை ஒன்றின் இன்று பேசும் ஐக்கிய நாடுகள் சபையெல்லாம் கூடப் பயனற்றுப்போகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அடிப்படையில் தொடங்கு கின்றது அத்தமிழன் வாழ்வு. எல்லா ஊரும் தன் ஊராம். எல்லா மக்களும் தம் உறவினராம். என்னே அவனது பரந்த ஒருமை உணர்வு. இன்று இந்த நிலைதான் உலகுக்கு வேண்டும் என்று உதட்டளவிலாவது பலர் பேச முன் வந்துள்ளனர். ஆனால் அவர் வாய்மொழியை உள்ளத்தில் கொண்டு உலகத் தலைவர்கள் உழைப் பார்களாயின் ஒருதலை முறையில் இருபோர் முடிந்து மூன்றாவது போக்கு வழிதேட மாட்டார்கள்.

உலகமக்கள் அனைவரையும் ஒத்து நோக்குகின்றன தமிழன் கண்கள். அனைவரும் ஒன்று என்று எண்ணுகின்றது அவன் தன் உள்ளம். 'காக்கை குருவி எங்கள் சாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்ற அத்துணை அளவுக்குப் பாரதி காட்டியபடி பரந்து செல்கிறது அவன் உள்ள நிலை. உயிர் அனைத்தையும், மக்கள் இனத்தையும் தாண்டி, தம் உறவில் ஒன்றாக்குகிறான். உணர்வில் ஒன்றாக்குகிறான். சென்றவிடமெல்லாம் தம் உறவினர் உள்ளனர். காணும் ஊர் எல்லாம் தம் ஊர் என்ற உணர்வு மக்கள் உள்ளத்தில் அரும்புவது எளிதன்று. எத்தனையோ வேறுபாடுகளும் பிறவும் மலிந்துள்ள உலகத்தில் சமரச உணர்வும் அனைவரையும் நம் உற்றவர் என்று நினைக்கின்ற நெஞ்சும் இருத்தல் சாலச்சிறந்த தன்றோ! ஆகவே இந்த உயரிய அடிப் படையில் அமைந்தது தமிழன் வழ்வு! அமையவே தமிழனுக்கு மற்றவன் கெடத் தான் மட்டும் வாழவேண்டும் என்ற குறுகிய மனப்பான்மை உண்டாகவில்லை. வரும் இன்ப துன்பங்களுக்கு வழி காண விழைந்தான். இன்பமுற்றால் தாம் பெற்றதாகவும், துன்பம் பெற்றால் பிறர் கொடுத்ததாகவும் எண்ணவில்லை அவன். இன்ப துன்ப மிரண்டும் தானே தனக்குத் தேடிக் கொள்வதை உணர்ந் தான். ஏன் அப்படி? அப்போது தான் அந்த 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று ஒருமை உணர்வு உலகில் உண்மையில் நிலைக்கும். எனவே தான் அந்த அடிக்கு அடுத்தபடி 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற எண்ணம் எழுந்தது. இயற்கையாக வருகின்ற தீங்குகளை மற்றவர் இழைத்தார் என்று அவர்கள் மேல் ஏற்றி அவர்மீது வெறுப்பு கொள்ளும் வழக்கம் அங்கு காணமுடி யாது. அனைத்தும் தன்னால் என்று ஏற்றுக்கொண்டான். எனவே, மற்றவர் மேல் காழ்ப்புக் கொள்ளா வழியிலே, ஒருமை உணர்வு ஊற்றுப் பெருக்கெடுத்தோடும். 'ஒட்டும் இரண்டுளத்தின் தட்டில் அறிந்தேன்' என்ற பாரதியாரின் பாடல்வழி உள்ளம் ஒன்று

படும் உயர்நலத்தைக் காண இயலும். கண்டார்கள் அன்றைய புலவர்கள். அவருள் கணியன் பூங்குன்றனாரும் ஒருவர். அவர் சரியான முறையில் மக்கள் வாழ்வைக் கணித்துள்ளார். அவர் வாய்மொழி புறநானூற்று 192வது பாடலாக விளங்குகின்றது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்வில்
இனிதென மகிழ்ந் தன்று மிலமேமுனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானந் தண்துளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லல் பேர்யாற்று
நீர் வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம் ஆதலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறம் 192)

என்பது அவர்தம் பாடல். இப்பாடலில் புலவர் தமிழர் வாழ்வு முழுவதையும் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார். வாழ்வு நலம் உற்றதற்கு மற்றொரு காரணமும் காட்டுகின்றார் கணியனார். மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உயரிய உள்ளம் பெறுதலே வாழ்வைச் செம்மையாக்கச் சிறந்த முறை என்பது தேற்றம். இன்பம் வரினும் துன்பம் வரினும் வேண்டுதல் . வேண்டாமை இல்லாது ஏற்றுக் கொள்ளுதலே வாழ்வின் குறிக்கோள் - லட்சியம் - முடிபு. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றான் வாய்மொழிப்புலவன் வள்ளுவன். ஆகவே துன்பத்தில் உளம் உடையாது, இன்பத்தில் தன்னை மறக்காது வாழும் வாழ்க்கையே தமிழன் கண்ட வாழ்க்கையாக அமைந்துள்ளது. பெருமையும் சிறுமையும் கூடப் போற்றவும் தூற்றவும் படாத பொருள்கள் என இறுதியில் வைக்கின்றார். போற்றலும் தூற்றலும் தான் மக்கள் மனதில் விரோத மனப்பான்மையை வளர்ப்பன. ஒருவனைப் போற்றி மற்றவனைத் தூற்றினால் தூற்றப் படுபவன் போற்றப்படுபவனைக் கண்டு பொறாமையுறுகின்றான். பொறாமை, அளவில் பெருகின் போராகின்றது. இந்தப் பொறாமை உளத்துக்கும் இடமல்லையே ஆசிரியரது ஈற்றிரண்டடிகளை இதயத்து எண்ணுவோமாயின். மக்கள் வாழ்வில் பெருமை சிறுமைகளை வருவிக்கும் வேறுபாட்டு நிலைகள் பல நாட்டில் உள்ளன. செல்வம் பெற்றவன் பெற்ற செல்வத்தால் மற்றவர்களுக்குக் கொடுத்துப் பேரும் புகழும் அடைதல் கூடும். ஆனால் வறியனோ கொடுக்கவும் வகையன்றி அதனால் புகழ் பெருக்கவும் வழியின்றி, தானும் மற்றவருக்கு அடக்கிப் பணியாற்றியோ, பிச்சையேற்றோ வாழ்கின்றமை

யால் இகழப்படுகின்றான். பொருளில்லாதாது அவன் குற்றமன்றே! ஆகவே இந்தப் பொருளால் வரும் செயலுக்கும் பிறவற்றிற்கும் புகழ்தலும், அஃது இல்லாவழிநேரும் குற்றத்திற்கு இகழ்தலும் அறிவுடைமையின் பட்டதாகாதே! எல்லாரும் எல்லாச்செல்வமும் எய்திவாழும் சிறப்புப் பெறுவார்களாயின், அன்று வேண்டுமாயின் அவர் தம் நலந்தீங்கை எண்ண இடமுண்டு. ஆனால் தமிழன் கருத்து அதுவும் வேண்டா, வேற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதால் என்பது. இவற்றையெல்லாம் எண்ணின் தமிழர் வாழ்வு எவ்வளவு உயர்ந்த குறிக்கோளின்-ஒன்றியஉணர்வில் - எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் இனம் என்ற பண்பாட்டில் சிறந்துள்ளது என்பது விளங்கும்.

நிற்க, இத்தகைய ஒருமை வாழ்வுக்கு ஏற்றதாக அமைய வேண்டுவது பொருளாதாரச் சீர்திருத்தமேயாகும். ஒருவன் உழைக்கவும் மற்றவன் உண்ணவும் வாழ்கின்ற இன்றைய வாழ்க்கையை அன்றைய தமிழன் வாழ்வு வற்புறுத்தவில்லை. ஒருவன் பட்டுடுத்துப் பொன்பூண்டு பவனிவர மற்றவன் கட்டக்கதையும்குடிக்கக் கூழும் இல்லாது ஏங்கும் வாழ்க்கை தமிழன் கண்டறியாதது. அவர்கள் - தமிழர்கள் ஒருமை உணர்வில் வேறுபாடற்ற வகையில் தமக்கும் உலகுக்கும் வேண்டியவகையில் உழைத்தார்கள். உழைப்பின் பயன் அனைவருக்கும் பொது என்று கண்டார்கள். உண்பது நாழி உடுப்பன இரண்டே மனிதவாழ்வுக்குத் தேவை என்பதை உணர்ந்தார்கள். அந்த இரண்டும் எல்லாருக்கும் அமையுமாயின் நாட்டில் வேற்றுமை உணர்ச்சியோ, வேறுபட்ட மனப்பான்மையோ தோன்ற வழி இல்லை உன்பதை உணர்ந்தார்கள். அதைப் போன்றே மனித வாழ்வுக்குத் தேவையான பிறவற்றிலும் வேறுபாடு இல்லாது வாழ்தல் சாலச் சிறந்தது என்பது அவர்தம் முடி பொருள். பொருளாதாரச் சமத்துவம் (Economic equality) நாட்டில் பொருந்தின் பிற அனைத்து நலங்களும் பொருந்தும் என்ற இன்று பேசப்படும் கொள்கை அன்று தமிழன்வாழ்விடைக் கொண்ட கொள்கையாகும். எனவேதான்,

> ' உண்பது நாழி உடுப்பன இரண்டே
> பிறவும் எல்லாம் ஓரொக்குமே '

என்ற புறநானூற்று அடிகள் எழுந்தன. இச்செவ்விய கருத்தை ஒட்டியே பிற்காலத்து வந்த ஔவையாரும் தாயுமானவரும் பொருளாதாரச் சமத்துவத்தை வற்புறுத்திச் சென்றார்கள்.

> ' உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
> எண்பதுகோடி நினைந்து எண்ணுவன - கண்புதைந்த
> மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
> சாந்துணையும் சஞ்சலமே தான் '

என ஔவையாரும்,

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

எனத் தாயுமானாரும் உலக இன்பத்திற்கும், அன்பின்பத்தை அடைதற்கு வேண்டிய உற்றவழியினையும் வற்புறுத்திச் சென்றார்கள். இத்துணை கண்டவாற்றால் தமிழர் வாழ்க்கை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தலை சிறந்துநின்றதென்பதும், அவ்வாழ்க்கை ஒருமை உணர்வில் உதித்ததென்பதும், மக்கள் பிறவி எடுத்தார் அனைவரினும் வேற்றுமை காணா மேன்மை வாழ்வே தமிழருடையதென்பதும், உலக வாழ்விற்கு இன்றியமையாத பொருள்களெல்லாம் அனைவருக்கும் சமமாக்கப்பட்டதென்பதும், பொருளாதாரம் முதலிய எல்லாவற்றினும் சமத்துவமே கொள்ளப்பட்டதென்பதும் நன்கறியப்பட்டன. இனி அவ்வாறு வாழ்ந்தவர் தம் வரலாறுகள் இரண்டொன்றை அவர் தம் வாய்மொழி கொண்டே காணுதல்வேண்டும்.

ஒருமை உணர்வின் அடிப்படையில் எழுந்த தொடரே 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்பது. சங்க காலத்துச் சான்றோர்கள் பலர் இக்கொள்கையைத் திட்டமாக வலியுறுத்திச் சென்றார்கள். பெற்ற செல்வத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, தாமும் இன்புற்று வாழும் வாழ்க்கையே மக்கள் வாழ்க்கை என்பது அவர் கருத்து. இந்த உணர்வு மக்கள் இனத்தைத் தாண்டி விலங்கிடத்தும், பறவையிடத்தும் புல் பூண்டுகளிடத்தும் கூடச் சென்றது. ஓரறிவுயிராகிய ஒரு கொடி பற்றுக் கோடில்லாது பதறுவதுகண்டு தனது பொற்றேரையே விட்டு வந்த கொடை வள்ளல் பாரியின் வரலாற்றையும், தோகை விரித்தாடிய மயில் குளிரால் வருந்துகின்றதென்று கருதிப் பொன்னாடை போர்த்த பேகன் வரலாற்றையும், அறியாதார் யார்! குமணன் தான் தலை பெற்று வாழ்வதைக் காட்டிலும், அத்தலைகொண்டு மற்றொருவர் வாழ வகை இருக்குமேயானால் அதற்காகத் தலைகொடுக்கவும் துணிந்த செயல் வரலாற்றில் இடம் பெற்ற ஒன்றன்றோ? பெருந்தலைச்சாத்தனார் தம் பசிக் கொடுமையைக் காட்டிப் புலம்பிய போது, தன்னிடத்து ஒன்றும் இல்லாமையின் வாளைக் கொடுத்து, தன் தலையைக் கொய்து தம்பியிடம் காட்டினால் பொன்னும் மணியும் தருவான் என்று புலவரை வேண்டிக்கொண்டது எதைக் காட்டுகிறது. தனக்கென வாழாப் பிறர்க்குரியவனாகக் குமணன் வாழ்ந்ததையன்றோ காட்டுகிறது. நாட்டை இழந்த கொடுமையைக் காட்டிலும் கொடுமையாக வன்றோ புலவர் வறுமையை நினைத்தான் குமணன். தான் வருத்தமுற்றாலும், இறப்பினும் கவலாது மற்றவர் வாழ வேண்டும் என்ற அந்த வளமார் கொள்கையிலன்றோ அவன் உள்ளம் ஒன்றிற்று. அவன் அருஞ் செயலை அவனால் வாழ்ந்த அப் பெருந்தலைச் சாத்தனார் வாக்காலேயே பார்த்தல் ஏற்புடைத்து.

"தாள் தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே

"பாடு பெருபரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடிழந்த தனினும் நனி இன்னாதென
வாள் தந்தந்தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்"

என்ற பெருந்தலைச் சாத்தனது வாய்மொழி தமிழர் தம் வாழ்வை தமிழ் மன்னர் வாழ்வை, தனக்கென வாழப் பிறர்க்குரியாளராக இயங்கும் வாழ்வை, ஒருமை உணர்வின்வழி உண்டாய வாழ்வை யன்றோ 'நமக்கு விளக்கிக் காட்டுகிறது. அரசர் மட்டுமின்றி அறிஞரும், பிறரும் கூட அத்தகைய அறவாழ்வினை மேற்கொண்டு வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல. விரிப்பிற் பெருகும். எனினும் ஒன்று காணல் இன்றியமையாதது.

குமணன் தொடர்பு கொண்ட மற்றொரு புலவர் பெருஞ் சித்திரனார். அவர் குமணனைப் பாடினார். பாடிப் பெற்ற பரிசில்கள் பல. பெற்ற பரிசிலைப் பெருயானைகள் மேலேற்றிக் கொண்டு தன் ஊர் சென்று மனைவியின் கையில் அனைத்தையும் ஒப்படைக்கிறார். இதுவரையில் அத்துணைப் பெருஞ் செல்வத்தைக் கண்டறியாத இல்லாள் வியக்கின்றாள். இப்பெருஞ் செல்வம் எதற்கு? என்ன செய்வது? என்ற பல வினாக்கள் எழுகின்றன அவள் உள்ளத்தில். வாய் திறந்து கணவனையும் கேட்டுவிடுகின்றாள். புதிதாக வந்த கேள்வி புலவரைத் திடுக்கிடச் செய்கின்றது. அவர் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக' வாழ்கின்ற பெரியார். பெற்ற செல்வம் எல்லார்க்கும் உரித்து என்று எண்ணுகின்ற பான்மையாளர் அவர். அவர் உள்ளம் வாக்கிடை வருகின்றது. வெள்ளத்தின் பெருக்கைப் போல் பெருக்கெடுக்கும் அவர் கவிப் பெருக்கம் அவர் உள்ளத்தை உலகுக்குக் காட்டுகிறது. 'பெற்ற செல்வம் ஒருவருக்கு உரியதன்று. ஒரு இனத்தார்க்கோ, குலத்தார்க்கோ உரியதன்று. ஆகவே பெற்றவற்றை அனைவருக்கும் யாதொரு வேறுபாடும் கருதாது வாரி வழங்குவாயாக' என மனைவியிடம் சொல்லுகிறார். இதோ அவர் வாக்கு!

'நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழ நின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைக்கிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருவேற் குமணன் நல்கிய வளனே

இத்தகைய அறவாழ்வில் - செந்நெறியில் அன்றைய தமிழன் வாழ்வு சென்றது. இடையறாது சென்றது. இன்ப நிலையில் சென்றது. இன்னும் அவன் வாழ்ந்த வளனை யெல்லாம் அளப்பதற்கு ஒரு பெரு நூல் தேவை. இந்தப் பொதுவாழ்வை, அறவாழ்வை உலகம் விட்டது. அதனால் தான் நாட்டில் பல கொடுமைகள் தலைவிரித் தாடுகின்றன. என்று உலகம் தமிழர் வாழ்வைத் தன் வாழ்வாகக்

கொள்ளுகிறதோ அன்று தான் உலகில் அமைதி நிலவும். என்று மக்கள் தமக்கென வாழாப் பிறர்க்குளியாளராக உள்ளார்களோ அன்று தான் உலகம் உய்யும். என்றும் உலகோர் தேவையான உணவும் உடையும் அனைவருக்கும் உரித்தாகக் வேண்டும் என்று எண்ணுகிறார்களோ அன்று தான் உலகம் சிறக்கும்! என்று எல்லோரும் எல்லாச் செல்வமும் எய்தி, பொருளாதார வேறுபாடு நீங்கி, ஒன்றிய உணர்வில் ஒன்று படுகின்றார்களோ அன்றுதான் உலகம் முன்னேறும். என்று உழைப்பவன் ஒருவன், உண்பவன் ஒருவன் என்ற வேறுபாடு இல்லாது எல்லோரும் ஒன்றாகக் கூடி, பெற்றதை அனைவரும் சமமாகப் பங்கிட்டு உண்டு வாழ்கிறார்களோ அன்றே உலகம் நலம் பெறும். என்று எல்லாம் நம் நாடு, எல்லோரும் நம் உறவினர் என்ற ஒருமை உணர்வில் உலக மக்கள் ஒன்று கூடுகின்றார்களோ அன்றுதான் நாடும் நாமும் நானிலமும் நலமுறும்! அந்நாள் விரைந்து வருவதாக! அருமைத் தமிழர் தம் அறவாழ்வு உலகமுழுவதும் வழக்கிடை வந்து வளஞ் சுரப்பதாக. வளர்க தமிழர் அறவாழ்க! வாழ்வு இவ்வையகம்!

தமிழ்க்கலை பொங்கல் மலர்

சென்ற ஆண்டினும் சிறந்த வகையில்
வெளிவருகின்றது

பல தலைவர்தம் எழுத்துக்களுடன்
கலைவிளக்கப் படங்களுடன்
கருத்தோவியங்களுடன்
வெளிவருகின்றது

தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும்
10 - 1 - 49ல் கிடைக்கும்

உறுப்பினர்களுக்கு 10 - 1 - 49ல் அனுப்பப் பெறும்
மற்றத் தேவையாளர்கள் தங்கள் பிரதிகளுக்கு
ஏற்பாடு செய்து கொள்க

தனிப்பிரதி ஒரு ரூபாய்
விற்பனையாளருக்குக் கழிவு 25%

பொறுப்பாளர்

தமிழ்க்கலை, சென்னை – 10

தமிழ்நாடும் சென்னையும்

கோவை C. S. இரத்தினசபாபதி முதலியார்

(எல்லைக் கமிஷன் கேள்விகளுக்குப் பதில் தந்த முக்கியனவருள் இவரும் ஒருவர். இவரது விளக்கம் சிறந்த முறையில் அமைகின்றது என்பது நம் கருத்து. அதில் வரும் சில கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.)

சிறந்த உளமும் தாராள மனப்பண்பும் உடைய தமிழர் தற்பொது சென்னை மாகாணம் பிரியவேண்டும் என்று கூறவில்லை. ஆந்திரரே முதலில் அதை விரும்பினர். சென்னை தமது என்று 1938-ல் தொடங்கி இன்று அதை வலியுறுத்தும் ஆந்திரர் செயல் கண்டே இன்று தமிழர் இதுபற்றிப் பேச முன்வந்தனர்.

நாடு இருக்கும் தற்போதைய நிலையில் - பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில், ஆந்திரமாகாணம் ஐதராபாத் எல்லையில் பங்குபெற வேண்டும் என்று அவர்களே கூறுகையில், அவர்களுக்கே ஒரு பெரும் பொறுப்பு அதனால் உண்டாகிறது. பலவற்றிற்கிடையே, ஆந்திரர் விரைந்து ஆந்திர மாகாணம் பிரியவேண்டும் என்று விழைவாராயின் இந்திய அரசாங்கமும், சமஸ்தானமும் அவர்கள் தேவை உடன்முடிக்க வேண்டுவதுதானா என்பதை ஆய்ந்து முடிவு செய்யவேண்டும்.

வரும் புதிய சென்னைமாகாணமும் (தமிழ்நாடு) பிறமாகாணங்களும் கீழ்க்கண்டவாறு அமைதல்வேண்டும்.

சென்னைமாகாணம் (தமிழ்நாடு) கொள்ளவேண்டிய மாவட்டங்கள் 1. சென்னை, 2. செங்கற்பட்டு (திருவள்ளுவர் பொன்னேரி தாலூக்காக்களில் சில ஊர்கள் நீங்கலாக), 3. வடஆர்க்காடு, 4. தென்ஆர்க்காடு, 5. தஞ்சை, 6. திருச்சி, 7. மதுரை, 7. இராமநாதபுரம், 9. திருநெல்வேலி, 10. கோவை (கொள்ளேகாலம் தாலூக்காவில் சில ஊர் நீங்கலாக) 11. நீலகிரி, (கூடலூர் தாலூக்கா நீங்கலாக) 12. சேலம் (ஓசூர் தாலூக்காவின் ஒருபகுதி நீங்கலாக) 13. சித்தூர் மாவட்டத்தே திருத்தணி தாலூக்கா முழுதும், சித்தூர், புத்தூர், கங்குந்தி தாலூக்காக்களின் பகுதிகளும். கோவை சேலம் நீலகிரி மாவட்டங்களில் நீங்கவேண்டும் எனக் குறிப்பிட்டன மொழிக்கணக்குப்படி அமைவனவாகும். 1931 மக்கள் கணக்கு அப்பகுதிகளில் திட்டமாக நீங்கவேண்டிய ஊர்களின் எண்ணிக்கையைத் தரும். கேரள, கர்நாடக மாகாணங்கள் ஏற்பட்டு, அங்குள்ள சமஸ்தானங்களும் அதற்கு இணங்கிப் பிரியவேண்டிய பகுதிகளில் உள்ள மக்களும் விரும்பினால்தான் கோவை முதலிய மாவட்டங்களில் உள்ள பிரிவுகள் நீக்கப்படலாம்.

(இந்தக் குறிப்பின்படி எல்லா எல்லைகளையும் அடக்கிய படம் ஒன்றும் இதனுடன் சேர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது).

ஆந்திரமாகாணம் :—இம்மாகாணத்தில் சேரவேண்டிய பகுதிகள் ஐதராபாத்து இந்திய யூனியனில் இணைவதிலும், அதிலுள்ள மக்கள் விருப்பத்திலும் அமைந்துள்ளது.

கர்நாடக மாகாணம் :—மைசூர் சமஸ்தானத்தையும், மற்ற சுற்றிய மக்களையும் கலந்து இம்மாகாணம் அமையவேண்டும்.

கேரள மாகாணம் :—கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்களைக் கலந்தே இம்மாகாணம் அமைக்கப்படவேண்டும். இந்த மாகாணம் உருவாகும்போது, திருவாங்கூர்ப் பகுதியில் தமிழர் பெரும்பாலராக உள்ள தோவளை, அகஸ்தீசுவரம், வில்லவன்கோடு, கல்குளம், செங்கோட்டை, பீர்மேடு, தேவிகுளம் ஆகிய தாலூக்காக்களின் பகுதிகள் அங்குள்ள மக்கள் விரும்பினால் சென்னை மாகாணத்தோடு (தமிழ்நாடு) சேர்க்கப்படவேண்டும்.

திருவாங்கூரும் கொச்சியும் அகண்டகேரளத்துடன் சேர விரும்பாவிடின் மலபார் மாவட்டம் மட்டும் தனி மாகாணமாக முடியாது.

*   *   *   *   *

உருவாகும் புது தமிழ் மாகாணம் சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்டு, சென்னை நகரத்தையே தலைநகராகக் கொள்ள வேண்டும். மற்றவற்றின் தலைநகர்களை அவ்வந் நாட்டு மக்களைக் கேட்டு முடிவு செய்யவேண்டும். புதுத் தலைநகர்களை ஆக்கும் முறையில், சிந்து ஒரிசா போன்ற மாகாணங்களைப் பிரிக்கும்போது கையாண்ட முறைகளை ஈண்டும் கைக்கொள்ளலாம்.

பீகார், ஒரிசா, அசாம், சிந்து மாகாணங்கள் பிரிக்கப்படும்போது முக்கிய ஆக்கவேலைகளுக்கு உரிய மாற்றுப்பணம் தருதல் பற்றிய வினா எழவில்லை என எண்ணுகின்றேன். அப்படி ஏதாவது உண்டாகுமானால் பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் அதிகமாகப் பெற்ற வரிப்பணம் இப்பெரு வேலைகளுக்கான செலவுகளைவிட அதிகமாக இருக்கும். எனவே மாகாணப் பிரிவினையில் இக்கேள்விக்கு இடமில்லை.

கருவூல (Treasury)த்திலுள்ள பொருளை ஆண்டு வருவாய் முறையொட்டிப் பங்கிடலாம். அதே முறையில் கடன்களையும் ஏற்கலாம்.

பெரும்பாலான மக்கள் ஒரே சமய, வாழ்வு முறையைக் கொண்டிருக்கின்றமையின் மாகாணங்கள் பிரிக்கும் காலத்து, மக்கள் மாற்றம், அதன் வழி எழும் அல்லல்கள் அதிகம் இருக்காது என எண்ணுகிறேன்.

சென்னையும் பம்பாயும் தனி மாகாணமாக வேண்டுமா ? பல அறிஞர்கள் பம்பாய் தனி மாகாணமாக இருக்கவேண்டும் என்று

கூறினும், சென்னைக்கு அது பொருந்தாது. நான் சென்னை தனி மாகாணமாவதை வன்மையாகக் கண்டிக்கிறேன். சென்னை நிலை பம்பாய் நிலையிலும் முற்றும் வேறுபட்டது. பம்பாய் சென்னையைப் போலன்றிப் பல நாட்டுமக்கள் பல முறையில் வாழும் இடம். பார்சிகள், குஜராத்தி, மார்வாரி, போரார், சிந்திகள் ஆகிய பலரும் கலந்து வியாபாரமும் தொழிலும் இயற்றும் பெரு இடம். எனவே பம்பாய் தனி மாகாண மாவதை அவர்கள் வற்புறுத்துகின்றனர். சென்னையைப் போலன்றி, மத்திய அரசாங்கத்துக்கு நிறைந்த வருமானம் தருகிறது. மற்றும் அது ஒரு தீவினை ஒத்தது. இத்தகைய காரணங்கள் இருந்தும், மகாராஷ்டிரர்கள் பம்பாய் தம் மாகாணத்தோடு சேரவேண்டும் என்று போராடும் போது, மேற்கண்ட ஒருவகையிலும் இதனுடன் ஒத்துவராத சென்னையைத் தனி மாகாணமாக்குவது சற்றும் பொருந்தாது.

சென்னை தமிழ் மாகாணத்தின் பகுதியாகவே இருக்கவேண்டும். ஏதோ பொருந்தா சரித்திர வரலாறு காட்டி ஆந்திரர் சென்னையைத் தமதாக்க முயல்கின்றனர். மொழிவாரி மாகாணம் என்றால், பிரிவு மொழிபற்றி அமைய வேண்டுமே யன்றி, வரலாறு கொண்டு அன்று. அப்படி வரலாறு கொண்டு நோக்கினும், சென்னை தமிழ் நாட்டோடு சேரவேண்டும் என்பதற்குக் கீழ்க்கண்ட வரலாறுகள் சான்று தருகின்றன.

மிகப் பழைய காலம் தொட்டு தமிழர் கலாசாரம் குமரிக்கும் வேங்கடமலைக்கும் இடையில் பரவியுள்ளது. கி. மு. 4-ம் நூற்றாண்டு முதல் வழங்கும் இலக்கியப்படி வேற்றுமொழி திருப்பதிக்கு வடக்கே பேசப்பட்டதாகவும் அந்நாடு வடுகநாடாக (தெலுங்கு நாடு) உள்ளதாக வும் அறிகிறோம். திருப்பதியும், காளத்தியும் தமிழ்நாட்டு வழிபடு தலங்கள். ஆழ்வார்களும் நாயன்மார்களும் அங்குள்ள கடவுளரைப் பாடி புள்ளார்கள். வேங்கியை ராஜராஜன் கொண்டதும், தமிழறிந்தசேரன் ஒருவர் இமய அடிவரை சென்றதும் வரலாற்று உண்மை. இவை தமிழர் கலாச்சாரம் செங்கற்பட்டு மாவட்டந்தாண்டி சித்தூர் நெல்லூர் ஆகிய இடங்களிலும் பரவி இருந்தது என்பதைக் காட்டுகின்றன. கிருஷ்ண தேவராயரும் தமது 'அமுக்த மால்யதா'வில் தமிழ்நாட்டு ஆண்டாளைப் பற்றிக் குறித்துள்ளார். ஆர்மகான் என்னும் புலிக்கட்டுக்கு(பழவேற்காடு) 38 கல்லில்உள்ள ஊர் தமிழ் ஆறுமுகத்தின் வழிவந்த பெயராகும். இவ் விடங்களில் பலவிடங்களில் பேசும் மொழி இன்னும் தமிழாகவும் தமிழ் கலந்த தெலுங்காகவும் உள்ளது. ஆந்திரர் வரலாற்றிலேனும், இலக்கியத்திலேனும், தமிழர் வடவெல்லையை வரையறுத்துக் காட்டிய படி, தம் தென் எல்லையைக் காட்டவில்லை.

ஆந்திரர் சென்னையை ஆந்திரரே ஆங்கிலேயரிடம் கொடுத்ததாக உரிமை கொண்டாடுகின்றனர். தற்போதுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை இருக்கும் சிறு இடத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்தவர்

சென்னப்ப நாயக் என்பவர், ஆந்திரால் சுட்டப்படுபவரல்லர். ஆனால் அன்று ஆர்க்காட்டு மாவட்டத்திலிருந்து வந்தவாசியிலிருந்து தற்போதுள்ள சென்னை வரையில் ஆண்ட ஒரு தமிழ் சென்னப்பனாவர் (மதராஸ் மெயில் சென்ற சுதந்திர தினமலரில் வந்துள்ள படம் காண்க.) இந்நிலம் ஆங்கிலருக்கு வழங்கப்படும் முன்பே சென்னப்பர் என்ற பெயர் நிலவி இருந்ததென்பதற்கு, சென்னமல்லீஸ்வரர், சென்ன கேசவப்பெருமாள் என்பன ஆதாரங்களாகும். தற்போதுள்ள இடத்திற்கு இவ்விரண்டு தெய்வ வடிவங்களும், சென்னை உயர் நீதிமன்றம் உள்ள இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டன. சென்னை மற்றப் பகுதிகளெல்லாம் ஆந்திரர் கொடுத்தன அல்ல. மகமதியரால் கொடுக்கப்பட்டன அவை.

இடங்கள்	கொடுத்தவர்	ஆண்டு
திருவல்லிக்கேணி	மூஷ்கான் (Musakhan)	1676
திருவொற்றியூர், எழும்பூர், புரசவாக்கம், தண்டையார் பேட்டை	முகலாய மன்னர்	1693
நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, கத்திவாக்கம், சாத்தன்குப்பம், திருவொற்றியூரின்ஒரு பகுதி	தௌகான் (Daudkhan)	1708
புரசை, எழும்பூரின் சில பகுதிகள் (மறுபடி சாசனமூலம்)	பாய் நவாப் சாப்டர் அலிகான் (Boy-Navab Safdar Alikhna)	1742
வேப்பேரி, எரநாவூர், சடையன்குப்பம், பெரம்பூர், புதுப்பாக்கம்	நாவாப் மகமது சையத் (Nawab Mahamd Sayeed)	1749
சென்தோம், மயிலை	போர்ச்சுகீசியர்	
சிந்தாதிரிப்பேட்டை	புதிதாக நெசவாளர் காலனியாக்கப்பட்டது	1734

எனவே இப்பகுதிகள் ஆந்திரரால் ஆங்கிலருக்குக் கொடுக்கப்பட்டன என்பது பொருந்தாததாகும்.

சென்னை முழுதும் தமிழ் எல்லையால் சூழப்பட்டுள்ளது. மயிலை, திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, சாத்தன்குப்பம், கத்திவாக்கம்,

புதுப்பேட்டை ஆகியனவும் இன்னும் பலவும் தனித்தமிழ்ப் பெயர்களே. சென்னையின் வளர்ச்சிக்கும் செல்வ வளத்துக்கும் தமிழ் பெரியோர்களாகிய, முருகப்ப முதலியார், டம்பாச்சாரி சிங்கார முதலியார், பச்சையப்ப முதலியார், மணலி சின்னையா முதலியார், செங்கல்வராய நாயகர், கோவிந்தப்ப நாயகர், சர். ராமசாமி முதலியார் ஆகியோரது பெருஉழைப்பும் உதவியுமே காரணம். குப்பங்களும், சேரிகளும் தமிழர் வாழ்வதை நன்கு விளக்கும்.

நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் மொழி பெரிதும் தமிழே! தமிழர் 1931 வது ஆண்டு கணக்குப்படி 100 க்கு 70 பேர் உள்ளனர். பள்ளி செல்லும் மாணவரில் சுமார் 95,000 பேர் தமிழ் பயில, சுமார் 6000 பேரே தெலுங்கு பயில்கின்றனர்.

1931-வது ஆண்டு மக்கள் கணக்கு

தமிழ் பேசுவோர்	4,11,823
தெலுங்கு பேசுவோர்	1,246.20
மற்ற மொழிகள்	1,10,758

ஆனால் இது சரியல்ல என்று தற்போதுதான் ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி தன் எல்லைபற்றி விளக்கத்தில் கூறியிருப்பது சரியன்று.

1931-ல் தமிழ் ஆந்திர காங்கிரஸ் தலைவர்கள் ஒரே துறையில் பணியாற்றினர். கணக்கெடுப்பை நீக்கச் செய்த பிரசாரம் ஆந்திரருக்கு மட்டும்தான் என்று சொல்வது பொருந்தாது. அதைத் தமிழரும் தடுத்திருக்கவேண்டும். அப்பிரசார நோக்கம் அந்நிய ஆட்சிக்கு அவலம் உண்டாக்க வேண்டும் என்பதே. அன்று சென்னை தமது என்று ஆந்திரர் கூறவில்லை. எனவே அந்தக் கணக்குப் பொருந்தாத தென்று கூறுவது, அதுவும் ஒரு ஆங்கில நாட்டான் நகரக் கணக்கெடுப்பின் உத்தியோகஸ்தராக இருந்து பொதுவாகச் செய்தது பொருந்தாத ஒன்று என்று ஆந்திர காங்கிரஸ் கமிட்டி கூறுவது சற்றும் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

1931-வது ஆண்டுக் கணக்கு அந்தத் தடுப்பானால் அதற்குமுன் உள்ள கணக்குக்கு என்ன சொல்லுவது.

ஆண்டு	தமிழர்	தெலுங்கர்
1901	2,75,277	1,07,478
1911	2,88,470	1,04,034
1921	3,36,853	1,04,117

1931ல் லிருந்து பிறமொழி பேசுவோரைக் காட்டிலும் தமிழர் அதிகமாகச் சென்னையில் குடியேறியுள்ளனர். அத்துடன் தமிழர்

வாழ்பகுதிகளாகிய அடையாறு, சைதாப்பேட்டை, கோடம்பாக்கம் செம்பியம், அமைந்தகரை ஆகியவை சென்னை நகர எல்லையில் சேர்ந்த தானது தமிழர் எண்ணிக்கையை 1931 க்கும் அதிகமாக்கி உள்ளது என்பது தேற்றம்.

பிறகு 1943-ல் ஒரு கட்சிச் சார்புமற்ற 'அட்வைசர்' ஆட்சி நடக்கையில் அரசாங்கத்தார் சென்னையைப் பெரும்பாலும் தமிழர் வாழும் பகுதியாகவே அறுதியிட்டனர் என்பது G. O. No. 997 EDN. dated July 22-8-1943, G. O. No. 1358 Public Health, dated June 16, 1943 ஆகியவற்றிலிருந்து விளங்குகிறது.

இச்சமயத்தே இந்த எல்லைக்கமிஷனை ஆந்திர காங்கிரஸ் கமிட்டியின் கீழ்வரும் வாக்கியத்தைக் கவனிக்க வேண்டுகிறேன்.

" ஆந்திர மாகாணம் பிரிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் உள்ள 35 லட்சம் ஆந்திரர்களும் ஆந்திரநாட்டிற்கு மாறி வர விரும்புவார்கள் என்பது பொருந்தாது. தமிழ்நாட்டில் உள்ள ஆந்திரர்கள் தமிழ் பயின்று, அவர் கலாசாரத்தின் வழி ஒழுகி அத்தமிழ்நாட்டைத் தம் சொந்த நாடாக்கிக் கொண்டார்கள். இதுவே தற்போது தெலுங்கு நாட்டில் உள்ள தமிழர்க்கும் பொருந்தும் "

தமிழர் நாட்டில் 35 லட்சம் ஆந்திரர் என்பது சென்னையில் உள்ள 1,24,620 ஆந்திரரையும் உள்ளிட்டதாதலின், அவர்களும் அவர் கருத்துப்படி தமிழ் பயின்று, தமிழர் கலாசாரத்தின் வழி பண்பட்டவராதலின், மேற்குறித்த கருத்து சென்னை தமிழ்நாட்டோடேயே சேர்க்கப்படவேண்டியதென்பதை வலியுறுத்துகின்றது.

ஆந்திரர் சென்னை பற்றிக் கொடுத்த சாட்சியைக் கமிஷன் நன்கு கவனித்தல்வேண்டும். பெரும்பாலாகத் தமிழ்மக்கள் வாழ்வதாகவும், சுற்றிலும் தமிழ் எல்லையே உடையதாகவுமுள்ள சென்னையை மிகப் பொருந்தாத கூட்டத்தார் ஆந்திரமாகாணத்தோடு சேரவேண்டும் என்று கேட்கின்றனர். மற்றொரு பிரிவார், புதிதாகக் காணும் ஆந்திர மாகாணத்துக்குத் தலைநகர் சென்னையிலேயே அமையவேண்டும் என்றும், எனவே சென்னையை இருகூறாக்கி வடக்குப் பகுதியை ஆந்திர மாகாணத்திற்கும், தென்பகுதியைத்தமிழ்நாட்டுக்கும் கொடுக்கவேண்டும் என்கின்றன. மூன்றாவது பிரிவினர் சென்னையைத் தனி மாகாணமாக்க வேண்டும் என்கின்றனர். சிலர் மூன்றையும்கூடச் சொல்வது விசித்திரமானது. இது அவர் தம் பொருந்தா நிலையை விளக்குகிறது. மொத்தமாகவோ, பகுதியாகவோ தம் ஆந்திரமாகாணத்தே சென்னை சேர்க்கப் படாவிட்டால், அதைத் தனி மாகாணமாக்கவேண்டும். என்ற யோசனையானது அவர்கள் சென்னையைத் தமக்கு உரிமையாக்குவதை விடத் தமிழர்களுக்கு விடலாகாது என்ற மனப்பான்மையைக் காட்டுகிறது.

மீன் பிடித்தல்

(T. R. சண்முகம்)

மீன் மனித உணவில் ஒரு அம்சமாக இருக்கிறது. உணவுப் பொருள்களை சைவம், அசைவம் என இருவகையாகப் பிரிக்கலாம். சைவர்கள் மாமிச உணவை உண்பதில்லை. அசைவர்கள் மாமிசத்தையும், காய்கறிகளையும் உண்பர். முன்னவர் அகிம்சையை ஓரளவிற்குக் கையாளுகின்றனர். பின்னவர் தன் ஊனை வளர்க்கப் பிறிது ஊன் விரும்புகிறார்கள். சைவப்பொருள்கள் காய்கறி, கனி, கிழங்கு, சருகு முதலிய தாவரவகை சம்பந்தமானவை. மாமிச உணவுகள், மீன், முட்டை, இறைச்சி ஆகியவைகளாகும். பாலைச் சிலர் சைவ உணவு என்றும், மற்றும் சிலர் அசைவ உணவு என்றும் கூறுவர். உலகத்தில் இன்று பெரும்பாலனவர் மாமிச உணவைக் கொள்ளுகின்றனர்.

இந்தியர்களுள் பெரும்பாலனவர் சைவர்களாகத் திகழ்கிறார். மீன் நமக்கு உணவாக அமையுமாயின் நமது உணவுப் பஞ்சத்தை பெரும் அளவிற்குக் குறைக்கச் செய்யும். இல்லையேல் மீண் பிடித்தலைக் கையாளுவதனால் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமும் மீன்களிலிருந்து மீன் எண்ணெய் என்ற D - Vitamin உள்ள தேக வலுவிற்குக் காரணமான பொருளைத் தயாரித்து நாம் பயன்படுத்துவதோடு, உலகிற்கு அனுப்புவதன் மூலமும் இந்தியப் பொருளாதாரத்தைப் பெருக்கி ஏழையின் வருவாயை அதிகப் படுத்தலாம்.

ஜப்பான் நாடு தன்னுடைய உணவிற்குப் பெரிதும் கடலையே நம்பி இருக்கிறது. அந்நாட்டு மக்கள் பயிர்த்தொழிலில் அமெரிக்க

இது தனக்கு உதவாத பாலை ஊற்றிக் கவிழ்த்து யாருக்குப் பயன் படாது செய்வதுபோலவும், எனக்கு இரண்டு கண்போனாலும் எதிரிக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும் என்பது போலவும் இருக்கிறது. 'சென்னை எங்களுக்கு இல்லையானால், தமிழர்க்கும் அது போகக்கூடாது' என்பதே அவர்தம் வாதம்.

தொழிலும் வாணிபமும் பெருகும் இந்த நாளில், புதிதாக உருவாகும் நீண்ட கடற்கரையை உடைய சென்னை மாகாணத்துக்கு (தமிழ் நாட்டுக்கு) ஒரு தனித் துறைமுகம் இருக்கவேண்டிய அவசியம் இருப்பதாலும், பிற மேற்காட்டிய காரணங்களாலும் சென்னை புதிதாக உருவாக்கும் சென்னை மாகாணத்தோடு (தமிழ்நாடு) சேர்க்கப்பட்டு, அதன் தலைநகராக இருப்பதே முறையாகும்.

பிரைரீஸ் நிலப்பகுதியினர் கையாளும் முன்னேற்ற வழிகளைப் போல் அநேக புதிய முறைகளை மீன் பிடிப்பதிலும், அதனைப் பக்குவப் படுத்துவதிலும், வெகு நாட்களுக்குச் சேமித்துக் காப்பாற்றி வைப்ப திலும் கையாளுகிறார்கள். உலகத்தில் இங்கிலாந்தின் கீழ்ப்புறத்திலும், ஐரோப்பாவின் வடமேற்குப் பாகங்களிலும், வட அமெரிக்காவின் நியூ யார்க் அருகிலுள்ள கடற்பகுதியிலும், வடக்குக்கடல்களிலும், மீன் பிடித்தல் அதிகமாக நடைபெறுகிறது. இத்தொழிலில் நார்வே, ஸ்வீடன், டென்மார்க், இங்கிலாந்து தேச மக்களில் பெரும்பாலோர் பெரிதும் ஊக்கம் கொண்டுள்ளார்கள்.

நாட்டு மீனைக் காட்டிலும் கடல் மீன்கள் மிகவும் நிறையுள்ளவை ; பெரியவை. சமீபத்தில் சென்னை அருகில் மூன்று மாதங்களுக்கு முன்னர் 700 முதல் 800 இராத்தல்கள் வரை எடையுள்ள சுறா மீன் களைப் பிடித்ததை அறிவீர்கள். இம் மீன்கள் கடல் உப்பு நீரில் வாழ்ந்தாலும், அந்நீரில் அவைகள் முட்டை இடுவதற்கும், குஞ்சு பொரித்தலுக்கும் பெரிதும் போற்றப்படும் நிலையில் அந்நீர் இருப்ப தில்லை. மிதமான வெப்பதட்பம் உள்ள இடங்களும், கடலில் திட்டுக் களும், ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களும் மீன் முட்டையிடுவதற் கும், குஞ்சு பொரித்தலுக்கும் பெரிதும் விரும்பி வாழ்வதற்கும் ஏற்ற இடங்களாக அமைகின்றன.

இன்று அமெரிக்காவில் மிகப் பெரியதும், பழையதுமான மீன் சந்தையாகிய பல்டன் (Fultan Fish Market) சந்தையைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளுவோம். அது நியூயார்க் நகரத்தின் மத்தியில் கீழாற்றின் கரையில் உள்ளது. பெரும் பொருளில் வியாபாரம் நடத் தும் அந்நகரில் ஆகாயத்தை அளாவிய பெருங்கட்டிடங்களுக்கும், அழ குறத் திண்மையாகக் கட்டப்பட்ட வியாபார ஸ்தலங்களுக்கும் இடையில் (Fulton) பல்டன் சந்தைக்குரிய பழைய கட்டிடங்கள் அமைந்திருக் கின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களுக்கும், ஆயுதந் தாங்கிய அந்நாட்டுப் படையினருக்கும், பிற ஐக்கிய நாடுகளுக்கும் கொடுத்து உதவுவதற்காக வருஷம் முழுவதும் இரவு பகலாக வெய்யிலிலும், குளிரிலும் பயமில்லாது அமெரிக்கர்கள் மூடுபனி, பனிக்கட்டி இவை களுக்கிடையே கொடூரமும், பயங்கரமுமான பேரலைகளுடன் கூடிய அட்லாண்டிக் சமுத்திரத்தில் மீன் பிடிக்கிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் என்றும் மீன் பங்கீட்டு முறைக்குக் கொண்டுவரப்படவில்லை. போர் நிகழ்ந்தக்கால் இறைச்சி பங்கீட்டு முறையில் அளிக்கப்பட்டமையின் மீன் அதிககமாகத் தேவைபபட் டது. இந்தத் தேவைக்கும், ஐக்கிய நாட்டில் உணவு விடுதிகளுக்கும், சிற்றுண்டிச்சாலைகளுக்கும், இல்லங்களுக்கும் சேமிப்பிடங்களுக்கும் இச்சந்தை மீனை அளித்து வந்தது. சண்டைக்கு முன்னர் ரயில் வண்டிகளின் மூலமும், கப்பல்களின் மூலமும், படகு

களின் மூலமும், அமெரிக்க நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும், உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும், புதிய மீன்கள் சந்தைக்கு வந்தன. பல்டன் சந்தையில் ஹாலண்டு தேசத்து ஓடை மீனும், இங்கிலாந்தின் மேவர் மீனும், ஜப்பானின் வாள் மீனும் (Sword Fish), தென் ஆப்பிரிக்காவின் பத்து அடி நீளமுள்ள நண்டு வால் என்னும் ஒரு வகை மீனும், ஸ்பெயின் அக்டோபஸ் (Octopus) மீனும், கரீபியனின் பச்சை மணிப்புறா வகை மீனும் விற்கப்பட்டன. இரு நூறு ஆண்டுகளாகத் கனடா, அமெரிக்கா, வட அட்லாண்டிக் சமுத்திரக் கரை, மெக்ஸிகோ வளைகுடா, இளஞ்சூடுள்ள தென்கடல்கள் இவைகளிலிருந்து கப்பல்களில் காட், ஹேடாக், லாப்ஸ்டர்ஸ், டெர்ராபின், ஷிரிம்ப் (Cod, Had-dock, Lopsters, Terrrpin, Shrimps, and a hundred varieties of Fish) என அனேக வகை மீன்கள் ஒவ்வொரு காலையிலும் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டன. சந்தையின் பூர்வீகத்தைப் பற்றி அறியப் புகுந்தவர்கள் இதன் தொடக்கம் 1664ல் என்பர். 1664ல் அமெரிக்க இந்தியர்கள் இதே இடத்தை நியூயார்க் நகரத்தின் முதல் சந்தையாகக் கொண்டு தாங்கள் எடுத்து வந்த மீனை விற்றனர்.

இரண்டாம் உலகயுத்தத்தின்போது அந்நாட்டு மீன்பிடிக்கும் பாய்மரக் கப்பலோட்டிகள் முன்னிலும் அதிகமாக வேலை செய்யவேண்டியவர்களானார்கள். ஒவ்வொரு நாளும் 650,000 பவுண்டுகள் முதல் 1,000,000 வரை புதிய மீன்கள் விற்பனையான இந்த மீனைக் கொண்டு வந்தவர்கள் உலகத்தின் அநேக நாடுகளிலிருந்து வரப்பெற்ற திடகாத்திரசாலிகள் ஆவர். இவர்கள் மெக்ஸிகோ குடாக் கடலின் க்யூபான்கள், கிரேக்கர்கள், பிரான்சு கன்னடியர்கள், இத்தாலியர்கள், ஸ்காந்திநேவியர்கள், ஆங்கிலோ ஸாக்ஸர்கள், போர்ச்சுகீசியர்கள் ஆகியவர்களாவார்கள். இப்பல நாட்டவர்கள் அமெரிக்க நாட்டின் மீன் தொழிலைப் பல நூற்றாண்டுகளாகக் கண்டு பிடித்த தங்கள் தங்கள் நாட்டின் புது முறைகளாலும், திறமையுள்ள வழிகளினாலும் சிறப்பிக்கச் செய்துள்ளனர்.

இம் முறைகளையும் பிற லாபகரமான வழிகளையும் மீன் பிடிக்கும் நம் நாட்டுச் செம்படவர்கள் அறிந்து, இந்திய நாட்டின் மீன் பிடிக்கும் தொழிலினைச் சிறப்புற வளர்த்துப் பொருளாதாரத்தினைப் பெருக்க அரசாங்கத்தினர் வேண்டிய உதவிகள் அளிப்பார்களா ?

முதியோர் இருவர்

M. A. துரை அரங்கனார் B. O. L. M. O. L.

முதியோர் இருவர் காசியாத்திரை செய்து இறைவனை வணங்கி வழிபாடு செய்ய எண்ணினர். அவருள் தேனனார் செல்வம் மிகுதியும் உடையர், பூவனார் அவ்வளவு செல்வம் உடையவர் அல்லர்.

தேனனார் ஒழுக்கம் விழுப்பமாகக் கொண்டவர்; எடுத்த செயலை முடிப்பதில் கண்ணும் கருத்தும் உடையவர்; உறுதியான உள்ளம் பெற்றவர். குடிப்பதோ, சுருட்டுப் பிடிப்பதோ, பொடி போடுவதோ, பிறரைப் புறங்கூறுவதோ ஒன்றும் அவர்தம் வாழ்க்கையில் செய்ததே இல்லை. இருமுறை அவர் மதுராந்தகம் ஊராண்மைக் கழகத் தலைவராய்ப் பணியாற்றினர். அப்பணியை விட்டு நீங்கிய போது கணக்கு வழக்குக்களெல்லாம் இம்மியளவும் பிசகாதிருந்தன. அவருடைய குடும்பம் மிகப்பெரியது. இரண்டு மைந்தர்களும், மணம் நிறைவேறிய பேரன் ஒருவனும் அவரோடு வாழ்ந்து வந்தனர். நோயில்லா உடலும், நீண்ட தாடியும், கூன்வளையாத உடற்கட்டும் அவர் பெற்றிருந்தார். வயது அறுபது ஆனபின்பு தான் அவருடைய தாடி சிறிது நரைக்கலாயிற்று.

பூவனார் பணக்காரர் என்றும் சொல்வதற்கில்லை. ஏழை என்றும் சொல்வதற்கில்லை. தச்சவேலை செய்து வந்த அவர், தள்ளாமை மிகுதியால் அதை விடுத்துக் கோழிக் குஞ்சுகள் வாங்கி வளர்க்கத் தலைப்பட்டார். மைந்தர்கள் இருவருள் ஒருவன் வேலை தேடித் திரிந்து கொண்டிருந்தான்; மற்றொருவன் அவரோடு வீட்டு வேலைகளைக் கவனித்துவந்தான். சில வேலைகளில் அவர் குடிப்பது வழக்கம் என்பது உண்மைதான். பொடி போடும் வழக்கமும் அவரிடம் இருந்தது. பாட்டுப்பாடுவதில் அவருக்கு விருப்பம் மிகுதியும் உண்டு. ஆனால் அவர் அமைதியே உருவமானவர். மனைவி மைந்தர்களோடும், அக்கம் பக்கத்தாரோடும் அவர் சண்டை சச்சரவின்றியே வாழ்ந்துவந்தார். குட்டையான வடிவமும், கறுத்த நிறமும், சுருண்ட தாடியும் உடைய அவருடைய தலைமட்டும் தேனனார் தலையே போன்று வழுக்கை பெற்றிருந்தது.

இருவரும், நெடுநாட்களுக்கு முன்பே, ஒன்று சேர்ந்து காசிக்குப் போய்வரவேண்டுமென்று விரதமெடுத்துக் கொண்டனர். ஆனால் தேனனார்க்கு ஒழிவே கிடைப்பதில்லை. எப்போதும் ஏதாவது வேலை அவருக்கு இருந்து கொண்டே இருக்கும். ஒரு வேலை முடிந்ததும் மற்றொரு வேலையை அவர் தொடங்குவார். அவருடைய பேரனுக்கு

முதலில் திருமணம் முடிக்க வேண்டியவரானுர்; பின்பு தம் இளைய மகன் போர்க்களத்திலிருந்திலிருந்து திரும்பிவருங்காலத்தை நோக்கி யிருந்தார்; அதன்பின்பு ஒரு வீடு கட்டத் தொடங்கினுர்.

விடுமுறை நாள் ஒன்றில் முதியோர் இருவரும் அவ்வீட்டிற்கு வெளியே ஒரு மரத்துண்டின் மேல் உட்கார்ந்து கொண்டு பேசத் தலைப் பட்டனர்.

"நல்லது தேனு! நம்முடைய விரதத்தை எப்போது தான் முடிப்பது?" என்று பூவனுர் கேட்டார்.

தேனனுர் தம் முகத்தைச் சுளித்தார்.

"சிறிது பொறுத்துத்தான் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டும்?" இந்த ஆண்டு எனக்குப் பொறுக்க முடியாத செலவை ஏற்படுத்திவிட்டது. இந்த வீட்டை ஓராயிர ரூபாயில் கட்டி முடித்துவிடலாம் என்று தொடங்கினேன். இது வரையில் மூவாயிரம் செலவாயிற்று. ஆனுல் வீடோ முடிந்தபாடில்லை. அடுத்த ஆண்டு பிறக்கும் வரையில் நாம் பொறுத்திருப்போம். கடவுளருளால் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் தவருமல் நம்முடைய விரதத்தைப் பூர்த்தி செய்து விடலாம்" என்ருர் தேனனுர்.

"அதென்னவோ, காலதாமதம் செய்யாமல் இப்பவே புறப்பட வேண்டும் என்று தான் எனக்குத் தோன்றுகின்றது. குளிர்ச்சியுடைய இதுவே மிகச் சிறந்த காலமன்றோ!" என்ருர் பூவனுர்.

"காலம் சிறந்தது தான்! ஆனுல் வீடு என்னுவது? எவ்வாறு இதைக் கட்டி முடிக்காமல் விட்டுவிட்டு வருவது?"

"இதைப்பார்த்துக் கொள்ள வேறு ஒருவரும் இல்லை போலப் பேசுகிருயே! உன்னுடைய மகன் இதைப் பார்த்துக் கொள்ளமாட்டானு?"

"அதெப்படி? என் மூத்தமகனையோ நான் நம்பமுடியாது—சில வேளைகளில் அளவுக்குமேல் குடித்துவிடுகிருன்!"

என்ன அப்பா! நாம் இறந்து போனுல் நம்மோடேயே அவர்களும் இறந்து போவார்களா! நம்முடைய துணையில்லாமல் அவர்கள் வாழமாட்டார்களா! உன் மூத்தமகனை இதில் ஈடுபட்டுச் சிறிது பழக்கம் அடையட்டுமே!"

"உண்மைதான் என்ருலும், எப்படியாவது ஒருவர் தொடங்கிய ஒன்றை அவரே முடிக்கவேண்டும் என்று ஆசைப்படுவது தானே இயற்கை!"

"சே! சே! நாம் தொடங்கும் எல்லாவற்றையும் நாமே செய்து முடித்து விடுவோம் என்று எப்போதும் நினைக்கவே கூடாது. ஒன்று

சொல்லுகிறேன், கேள்! பொங்கல் விழாவை முன்னிட்டு வீட்டிற்கு வெள்ளையடிக்கவும், அலங்காரங்கள் செய்யவும் என் வீட்டுப் பெண்டிர்கள் தொடங்கினர். இந்தப் புறம் ஒன்று செய்யவேண்டியிருந்தது. அந்தப் புறம் ஒன்று வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் முற்றும் அவர்களால் செய்து முடிக்க முடியவில்லை. என்னுடைய மூத்த மருமகள் புத்திசாலி. அவள் சொன்னதைக் கேட்டால் நீயே வியப்படைவாய்! "நாம் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து முடித்து விடுவோமோ, மாட்டோமோ பொங்கல் விழா நம்மை எதிர் பாராமல் வந்து போயிற்று. இல்லையெனில் அது வருவதற்குள் நாம் ஒரு போதும் தயாராகவே இருக்கமுடியாது. அதுபற்றி நாம் அதற்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்" என்றாள்.

தேனனார் ஆழ்ந்து சிந்தித்தார்.

"நானோ இந்த வீடு கட்டும் பொருட்டு ஏராளமாகச் செலவு செய்து விட்டேன். வெறுங்கையோடு யாத்திரை செய்வது என்பது கூடாத செயல். நம்முள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாயாவது வேண்டாமா! ஆயிரம் ரூபாய் என்பது, என்ன, மாங்காயா புளியங்காயா?"

அது கேட்ட பூவனார் வெடி சிரிப்புச் சிரித்தார்.

"ஏண்டா அப்பா! எனக்கிருக்கும் சொத்தைப் போல் பத்து மடங்கு சொத்து உன்னிடம் இருக்கிறது! இருந்தும் பணம், பணம், என்கிறாய்! சும்மா சொல், எப்போது புறப்படலாம் என்று! என்னிடமோ இப்போது ஒரு காசும் இல்லை. ஆனால், அதற்குள் போதுமான பணம் தயார் செய்கிறேனா, இல்லையாபார்!"

தேனனாருக்கும் சிரிப்பு அடக்கமுடியவில்லை.

"கோபித்துக் கொள்ளாதே! அவ்வளவு பணக்காரன் என்று உன்னை நான் நினைக்கவேயில்லை. இருக்கட்டும் அவ்வளவு பணம் உனக்கு எங்கிருந்து கிடைக்கும்?"

"எங்கிருந்து கிடைக்குமா! என் குடும்பத்தவர் வைத்திருக்கும் சில்லறைகளையெல்லாம் பிராய்கிறேன். கோழிக்குஞ்சுகள் வளர்ந்திருக்கின்றன. சிலவற்றை விற்றுவிடுகிறேன். என் அண்டைவீட்டுக்காரன் தான் அவற்றை வாங்கிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் எப்போது ஏற்படுமோ என்று காத்துக்கொண்டிருக்கிறானே!"

"அவைகள் இப்போது முட்டையிடத்தொடங்கினால், நீ பெரிதும் வருந்த மாட்டாயா?"

வருத்தமா! நண்பா அது தான் கிடையாது! என்னுடைய பாவங்களின் பொருட்டு அல்லாமல், என் வாழ்க்கையில் எந்த ஒன்றிற்கும் நான் எப்போதும் வருத்தம் அடைந்ததே இல்லை. உயிரைவிட உயர்ந்த பொருள் உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லையே!"

"உண்மைதான்! ஆனால், வீட்டு விவகாரங்களை அசட்டை செய்வது நல்லது ஆகாதே!"

"அப்படியானால் நம்முடைய உயிரை அசட்டை செய்யலாமா? அது மிகவுல் கெடுதல் ஆயிற்றே! நாமோ காசிக்குப் போய்வரவேண்டும் என்று விரதம் எடுத்துக் கொண்டுவிட்டோம். வா, போய் வரலாம். அசட்டை செய்யாமல் இப்போதே புறப்படுவோம், வா."

2

பூவனார் தம் நண்பனார் உள்ளத்தைத் தம் வயமாக்குவதில் வெற்றி பெற்றுவிட்டார். நன்றாகச் சிந்தித்துப்பார்த்துவிட்டு மறுநாள் காலையில் தேனனார் பூவனார் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

"நீ சொல்வது முற்றும் சரி! நாம் புறப்படுவோம் வாழ்வும் சாவும் இறைவன் வசப்பட்டன. நாம் உயிரோடும், உடல் வன்மையோடும் இருக்கும் இப்பொழுதே போய்வருவது தான் தக்கது."

ஒரு வாரம் கழிந்தது. அவர்கள் புறப்படச் சித்தமானார்கள். தேனனார் தம்மிடம் இருந்த பணத்தில் இரண்டாயிரம் ரூபாயைத் தம் மனைவியிடம் கொடுத்து விட்டு ஓராயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டு புறப்படத் தயாரானார்.

பூவனார் கோழிகளுள் பலவற்றை விற்றதில் எழுநூறு ரூபாய் கிடைத்தது. மற்றத் தொகையைக் குடும்பத்தாரிடமிருந்து அவர் பிராய்ந்து விட்டார். தம்முடைய இறுதிக் கடன்களுக்கு என்று சேர்த்துவைத்திருந்த பணம் முழுதையும் அவர் மனைவியார் அவரிடம் கொடுத்துவிட்டார், அவருடைய மருமகளும் தன்னிடம் இருந்ததை யெல்லாம் கொடுத்துவிட்டார்.

தேனனார் தம்மூத்த மகளிடம் இன்ன இன்ன இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று வரிசைக் கிரமமாகக் கூறினார்; நெற்பயிரை எப்போது அறுவடை செய்வது, எருவை எப்படி வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் வயலில் சேர்ப்பது, அரை குறையாக இருந்த வீட்டின் கூரையை எப்படிக் கட்டிமுடிப்பது என்றெல்லாம் அவளிடம் ஒவ்வொன்றாக அழுத்தம் திருத்தமாக வகுத்து விளக்கினார்; ஒவ்வொன்றையும் பலப்பல முறை எண்ணி எண்ணிப் பார்த்து மறந்து போகாமல் ஒழுங்காக அவளிடம் கூறி முடித்தார்.

பூவனாரோ, விற்றன போக எஞ்சிய கோழிகளைத் தீனிபோட்டுக் காப்பாற்றி வருமாறு தம் மனைவியிடம் கூறினாரே அன்றி வீட்டு விவகாரங்களைக் குறித்தும் திட்டமாக ஒன்றுமே சொல்லவில்லை. "தேவையானவற்றுள் எதை எப்படிச் செய்யவேண்டும் என்பதை நீங்களே அறிவீர்கள், நீங்களெல்லாம் வயதுவந்தவர்கள், உங்களுக்கு

எது சிறந்தது என்று படுகிறதோ அதை எவ்வாறு செய்துகொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்ற அளவில் தான் பூவனூர் தம் குடும்பத்தவரிடம் கூறினார்:

எனவே, இருவரும் பயணத்திற்கு ஆயத்தமானார்கள், அவர்களுடைய குடும்பத்தவர் அவர்களுக்குச் சோற்று முடிச்சும், துணி மணிகளின் மூட்டையும் கட்டிக் கொடுத்தார்கள்.

சலவை ஆடைகள் அணிந்துகொண்டு இருவரும் புறப்பட்டனர். ஊரின் எல்லைப்புறம் வரையில் குடும்பத்தார் அவர்களுடன் வந்து வழி விட்டனர்.

பூவனூர் உவகையோடு வீட்டை விட்டுக் கிளம்பினார். ஊரைக் கடந்தவுடன் தம் வீட்டு விவகாரங்கள் எல்லாவற்றையும் அவர் அடியோடு மறந்துவிட்டார். அவருடைய கவலையெல்லாம் தம் நண்பரை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளவது, எவ்வாறு மகிழ்விப்பது, அவரிடம் கடுகடுத்த மொழி கூறாமல் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வது, எவ்வாறு காசியை அடைவது, நல்லபடியாகவும் இனிமையாகவும் எவ்வாறு திரும்பி வீட்டை அடைவது என்பது தான். வழியே போகும் போது இறைவனைப்பற்றிய துதிபாடல்களைத் தமக்குத் தாமே பாடிக்கொள்வது, இல்லாவிட்டால் தம்முடைய நினைவிற்குவரக் கூடிய அடியவர்கள் வரலாறுகளைத் தம்மனத்திற்குள்ளே எண்ணிப்பார்ப்பது இவ்வளவே பூவனூர் செய்துவந்தார். வழியே யாரையாவது சந்தித்தாலும், இரவில் எங்கேயாவது தங்கினாலும் பிறர்மனம் நோகாதபடி பேசுவதும் நடந்து கொள்வதும், கடவுளைப்பற்றிய நன்மொழிகளைக் கூறுவதும் தவறாமல் அவர் போற்றிவந்தார். எனவே இன்பமாகவே அவர் பயணம் செய்துவந்தார். ஒன்று மாத்திரம் அவரால் விலக்க முடியவில்லை. பொடி போடாமல் அவரால் இருக்க இயலவில்லை. பொடி மட்டையை வேண்டுமென்றே வீட்டில் வைத்து விட்டுத்தான் அவர் புறப்பட்டார். ஆனால், பொடி மீது வைத்திருந்த ஆசையை அவரால் விடவே முடியவில்லை. யாராவது எதிர்பட்டவரிடம் அவர் ஒரு சிட்டிக்கை பொடி கேட்டு வாங்கிப் போட்டுகொள்ளுவார். அடிக்கடி தம் நண்பரைவிட்டுப் பின் தங்கிவிடுவார். தம்மை அவர் திரும்பிப் பார்க்கிறாரா என்று சோதனை செய்வதற்காக அன்று; பின் தங்குவதெல்லாம் ஒரு சிட்டிக்கை பொடியை மூக்கில் ஏற்றுவதற்கே.

தேனனூரும் ஒழுங்கோடும் உறுதியான உள்ளத்தோடும்தான் வழி நடந்தார். தவறொன்றும் செய்யாமலும், பயனில்லாத மொழிகள் பேசாமலும் தான் அவர் சென்றார். ஆனால், அவருடைய உள்ளம் பூவனூர் உள்ளம் போல் அவ்வளவு இலேசாகவே இல்லை. குடும்பக் கவலைகள் அவர் உள்ளத்திற்குப் பெருஞ்சுமையாக இருந்தன. வீட்டு விவகாரங்கள் என்ன ஆயினவோ என்று அவர் மிகவும் கவலை கொள்ளுவார். 'மகளிடம் இதைச் சொல்ல மறந்து விட்டேனே, அதைச் சொல்ல

புரட்சி

புரட்சியாலே, மண்ணுவரே, தாரணிமீதே

—நலங்கிள்ளி

தண்ணீரும் நெருப்பாகிச் சுட்டெரிக்கும் தருகாலம்
வாய்த்திட் டாலிம்
மண் ணுள்ளே நெளிந்திடுமோர் புன்புழுவும் வரிப்புலிபோல்
பாய்ந் தெதிர்க்கும்
மண்கிளரி உழுதலுத்து செல்வர்தமுன் மண்டியிடும்
வறிஞ ரேனும்
புண்ணையின் அவர்உள்ளம் பொடிப்பொடியாய்ப் போமுலகம்
புரட்சி யாலே. (1)

தின்னச் சோறில்லாமல் தீப்பற்றி அடிவயிறு
எரியு மாயின்,
தன்கலைக்கோ தன்மொழிக்கோ தன்நாடு தனக்கோ
கேடெய்து மாயின்,
எண்ணற்கு அறிதாய பெரும்புரட்சி எரிமலைபோல்
வெடிக்கு மாங்கே
மண்ணரசர் பெருஞ்செல்வர் மந்திரிமார் மதவெறியர்
மண்ணு வாரே. (2)

குடித்தனத்தில் குடிக்கக்கைக் கூழின்றி உழவனுங்கு
ஏக்க முற்ருல்
அடக்குமுறை தனையாள்வோர் மக்கள்மீ தடுத்தடுத்து
வீச நேர்ந்தால்
முடியுடையோர் வால்பிடிப்போர் முழுப்புரட்டர் பணக்காரர்
இன்னே ரன்னேர்
சடசடெனச் சாய்ந்திடுவர் தரைமட்ட மாய்ப் போவர்
தரணி மீதே. (3)

மறந்து விட்டேனே" என்று அடிக்கடி அவர் எண்ணுவார்; 'கத்தரிச் செடியைச் சரியாக அவள் நட்டு முடிப்பாளா? வண்டியில் எருவை ஏற்றிக்கொண்டு போய் வயலில் கொட்டியிருப்பாளா? நாள் சொன்னபடி எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து முடிப்பாளா' என்றெல்லாம் எண்ணுவார்; திரும்பிச் சென்று 'இப்படித் தான் செய்ய வேண்டும்' என்று அவளுக்குக் கூறலாமா அல்லது தாமே செய்யலாமா என்று மிகவும் கவலைப்படுவார். (தொடரும்)

அந்தத் தொடக்க நாளில்

ம. இராதாகிருஷ்ணப் பிள்ளை, M.A., B.L, (முன்னைய மேயர்)

(முன் இதழ் தொடர்ச்சி)

பாம்பு: அப்படி நடக்கக் கூடாது. நான் உன்னைப் பூசிக்கிறேன், ஈவ். எனக்குப் பூசிக்க ஏதாவது வேண்டும். என்னைத் தவிர்த்து உன்னைப்போல் வேறேதாவது வேண்டும். பாம்பை விடச் சிறந்தது ஏதாவது இருக்க வேண்டும்.

ஈவ்: ஆம். அப்படிக் கூடாது தான். ஆதாம் அழியக் கூடாது. நீ சாமார்த்தியவான்; செய்ய வேண்டுவ தென்ன வென்று எனக்குக் கூறு.

பாம்பு: யோசனை செய். விரும்பு. புழுதியைச் சாப்பிடு, வெள்ளைக் கல்லை நாவினல் சுவை. நீ எந்த ஆப்பிலைக் கண்டு பயப்படுகிருயோ அதைக் கடித்துத் தின். சூரியன் உயிரளிப்பான்.

ஈவ்: நான் சூரியனை நம்பவில்லை. என் உயிரையே கொடுக்கிறேன். அந்தச் செயலில் என் உடம்பைக் கூறுக்கிவிட்டால் என் உடம்பிலிருந்து மற்ெருரு ஆதாமைப் பிரிக்கிறேன்.

பாம்பு: செய், தைரியமாகச் செய். ஆகாததொன்றில்லை. எல்லாமே கேள். நான் வயதானவன். நான் பழைய பாம்பு, ஆதாம், ஈவ் ஆகியோரை விட வயதில் முதிர்ந்தவன். ஆதாமுக்கும் ஈவுக்கும் முன் தோன்றிய வித்தை நான் அறிவேன். நான் உன் அன்பைப் பெற்றது போல் அவள் அன்பையும் பெற்றிருந்தேன். அவள் தனியாக இருந்தாள். அவளோடு ஒரு மனிதனும் இல்லை. மான் குட்டி வீழ்ந்தபோது என்னைப் போலவே அவளும் சாவைப் பார்த்தாள். என்னைப்போல் தோலைஉரித்துத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் விதத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்று அவள் விரும்பினுள். அவளுக்குத் திடசித்தம் இருந்தது. அவள் பல தரம் முயற்சித்து விருப்பங் கொண்டாள். அவள் நிரம்ப வருந்தினுள். அவள் வருத்தத்தால் இட்ட கூக்குரல் காடு முழுவதும் உறக்கத்தைக் கெடுத்தது. ஒருவரால் பொறுக்க முடியாத பளுவை அவள் சுமந்தாள். அவள் தன் தோலை வெளியேற்றிய போது ஒரு லிலித் இல்லை, இரண்டு பேர் இருந்தனர். ஒன்று அவளைப் போல இருந்தது, மற்ெருன்று ஆதாமைப் போலிருந்தது. அவளைப் போலிருந்தவள் நீ; மற்றது ஆதாம்.

ஈவ்: அவள் ஏன் எங்களைப் பிரித்து வேற்றுருவங்களாக்கினுள்.

பாம்பு: சுமை ஒருவருக்கு அதிகமாதலால் இருவராகப் பிரித்

தாள், இருவரும் அதைப் பகிர்ந்து கொள்ள.

ஈவ் : ஆதாம் அதை என்னோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று கூறுகிறாயா ? அவன் மாட்டான். துன்பத்தை அவனால் சகிக்க முடியாது. உடம்பாலும் உழைக்க மாட்டான்.

பாம்பு : அவன் செய்ய வேண்டாம். அவனுக்கு ஒரு துன்பமும் இருக்காது. தன் பங்கையும் என்னையே செய்யும்படிக் கேட்பான். உணர்ச்சியால் என் ஆணைக்கு அவன் உட்படுவான்.

ஈவ்:அப்படியானால் நானதைச் செய்கிறேன். எப்படிச் செய்வது? லிலித் இந்த அற்புதத்தை எப்படிச் செய்தாள் ?

பாம்பு : அவள் சிந்தனை செய்தாள்.

ஈவ் : சிந்தனை என்பது என்ன?

பாம்பு : ஆச்சரியமான விதமாகத் தனக்கு முன் இல்லாதிருந்த லிலித்துக்கு ஏற்படாதவற்றைக் கதைபோலக் கூறினாள். நீ விரும்புவதைச் சிந்திக்கிறாய். சிந்திப்பதைவிரும்புகிறாய். விரும்புவதை கடைசியில் நீ உண்டாக்குகிறாய் !

ஈவு : எதனிலிருந்து சிருஷ்டிப்பது. சிருஷ்டிப்பதற்கென ஒன்றும் இல்லையே.

பாம்பு: ஒவ்வொன்றும், இல்லாதிருந்த ஒன்றினிடமிருந்து தான் உண்டாக்கப்பட வேண்டும். உன்னுடைய கரங்களிலிருக்கும் சதையைப் பார் ! அது முன்பு இல்லை. நான் முதலில் பார்த்த போது உன்னால் மரம் ஏற முடியாது; நீ விரும்பி முயற்சித்தாய். கடைசியில் உன் கரங்களில் உள்ள சதையின் உதவியால் மரக்கிளை மேல் ஏறி உட்கார்ந்து கொள்ளக் கற்றுக்கொண்டாய்.

ஈவ்: அது பழக்கம்.

பாம்பு : பழக்கத்தால் சாமன்கள் தேய்வடைகின்றன. அவை அதனால் வளருவதில்லை. உன் கூந்தல் காற்றில் அசைந்து அசைந்து நீளமாக வளர ஆரம்பிப்பதுபோல் காண்கின்றது. ஆனால் அது உண்மையில் வளரவில்லை. ஏனென்றால் அதை நீ விரும்பவில்லை. எங்களுடைய பேசா மொழியில் தான் சிந்தித்ததை லிலித் எனக்குக் கூறிய போது நான் அவளை விருப்பங் கொள்ளும்படி வேண்டினேன். அவளும் விரும்பினாள். அவள் இச்சையின் காரணமாக அவள் விருப்பங்கொண்ட பொருள் உண்டாயிற்று. நானும் என்னை இரண்டாக புதுப்பித்துக் கொள்ள விரும்பினேன். சில நாட்களுக்குப்பின்நான் நினைத்த அதிசயம் நிறைவேறியது. என் தோலை உரித்தபோது என்னுடன் மற்றொரு பாம்பு தோன்றியது. இப்பொழுது இரண்டு சிந்தனைகள், இரண்டு விருப்பங்கள். இரண்டு இச்சைகள் உற்பத்தி செய்ய இருக்கின்றன.

ஈவ்:விரும்பி, சிந்தித்து, இச்சை கொண்டு, உற்பத்தி செய்ய வேண்டும். இது பெரிய கதையாயிருக்கிறதே. இவற்றையெல்லாம் சொல்லில் வல்லவனாகிய நீ ஒரே வார்த்தையில் சொல்லக் கூடாதா ?

பாம்பு : ஒரே வார்த்தையில், கருக்கொள்வது. சிந்தனையின் ஆரம்பத்தையும் உற்பத்தியின் முடிவையும் அது குறிக்கும்.

ஈவ் : லிலித் உனக்கு பேசா மொழியில் கூறிய கதைக்கு ஒரே

சொல் கண்டு பிடித்துச் சொல்: அசம்பா விதமானதா யிருந்து உண்மையில் நடந்த அக் கதையைக் கூறு.

பாம்பு : அது ஒரு 'பாடல்'

ஈவ் : லிலித் எனக்கு என்ன வேண்டுமென்று ஒரே வார்த்தையில் கூறு.

பாம்பு : அவள் உன் தாய்.

ஈவ் : ஆதாமின் தாயும் கூட.

பாம்பு: ஆம்.

ஈவ்: (எழுந்திருக்க முயற்சி செய்து கொண்டே) நான் ஆதாமிடம் சென்று கரு தரிக்கும்படி கூறுகிறேன்.

பாம்பு : (நகைக்கிறது)

ஈவ் : (திகைத்து) என்ன கோரமான சப்தம். உனக்கு என்ன? இதைப்போன்ற சப்தத்தை நான் ஒருவரிடமும் இது வரையிலும் கேட்டதே கிடையாது.

பாம்பு : ஆதாம் கருக் கொள்ள முடியாது.

ஈவ்: ஏன்?

பாம்பு: லிலித் அவனை அவ்வாறு செய்ய விரும்பவில்லை. அவன் விருப்பங் கொள்ளலாம்; அவன் இச்சைப் படலாம், அவன் சிந்திக்கலாம். தன்னுடைய வாழ்க்கையை உற்பத்தியைச் செய்யும் ஊற்றாகப் பயன் படுத்தலாம். அவன் எல்லாவற்றையும் உண்டாக்கலாம். ஆனால் தன்னைப் போன்றவையைத் தவிர்த்து எதை வேண்டுமானால் உற்பத்தி செய்யலாம்.

ஈவ் : லிலித் இதை அவனுக்கு ஏன் கூறவில்லை.

பாம்பு : அதைச் செய்யவேண்டுமானால் ஈவில்லாமலா செய்வான். அதனால் கூறவில்லை.

ஈவ் : ஆம். நான் தான் கருத்தரிக்க வேண்டும்.

பாம்பு: அதனால் அவன் உனக்கு பந்தப்பட்டிருக்கிறான்.

ஈவ் : நான் அவனுக்குப் பந்தப் பட்டிருக்கிறேன்.

பாம்பு : ஆம். மற்றொரு ஆதாமை உற்பத்தி செய்யும் வரை.

ஈவ் : அதைப்பற்றி நான் நினைக்கவில்லை. நீ கூர்மையான அறிவுடையவன். நான் மற்றொரு ஈவை உண்டாக்கினால் அவன் என்னை விட்டு அவளிடஞ் சென்று விடுவான். ஆகையால் நான் ஈவ்களை உண்டாக்கச் செய்ய மாட்டேன். ஆதாம்களையே உண்டாக்குவேன்.

பாம்பு : ஈவ்கள் இல்லாமல் ஆதாம்கள் உண்டாக முடியாது. இப்பொழுதோ, இன்னும் கொஞ்ச நாள் கழித்தோ நீ மான் குட்டியைப்போல் இறந்து விடுவாய். புதிய ஆதாம்கள் புதிய ஈவ்கள் இல்லாமல் சிருஷ்டிக்க முடியாது. அப்படிப்பட்ட முடிவைப்பற்றி நீ மனதில் நினைக்கலாம் ஆனால் அதை நீ விரும்ப மாட்டாய்: இச்சைப் பட மாட்டாய்; ஆகையால் ஆதாம்களை மாத்திரம் சிருஷ்டிக்க முடியாது.

ஈவ்: நான் மாத்திரம் மான் குட்டியைப் போல் இறக்க வேண்டுமானால் ஏன் மற்றவர்கள் இறக்கக்கூடாது. எனக்கு என்ன அதைப்பற்றி கவலை?

பாம்பு : உயிர் வாழ்வு முடிவடையக் கூடாது. எல்லா வற்றிலும் அது மிகவும் இன்றி அமையாதது. நான் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை என்று நீ

கூறுவது விவேகமின்மை. உனக்கு அதில் அக்கரை உண்டு. அந்த அக்கரை தான் உன் சிந்தனையைத் தூண்டும். உன் விருப்பங்களைக் கொழுத்து விட்டெரியச் செய்யும். உன்னுடைய விருப்பத்தைத் தடுக்க முடியாத தாய் வைத்துக்கொள். ஒன்றுமில்லாததிலிருந்து உற்பத்தி.

ஈவ் : (யோசித்து) ஒன்றுமில்லாதது என்று எதுவும் கிடையாது. தோட்டம் நிறைந்திருக்கிறது. காலியாயில்லை.

பாம்பு : நான் அதைப்பற்றி நினைக்க வில்லை. அது சிந்திப்பதற்கான பெரிய பொருள். ஆம். இல்லாத தென்றொன்றில்லை. அவை பார்க்க முடியாதன. ஒன்றன் காற்றை உண்கிறது.

ஈவ்: எனக்கு வேறொரு எண்ணம் உண்டு அதை நான் ஆதாமிடம் கூற வேண்டும். (கூவுகிறாள்) ஆதாம், ஆதாம்.

ஆதாமின் குரல் : யார் அது.

ஈவ் : இது அவனைக் குணப்படுத்தி மனநிலையை மாற்றும்.

பாம்பு : அவனுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் கூறாதே. நான் உனக்கு பெரிய ரகசியத்தை இன்னும் கூறவில்லை.

ஈவ் : இன்னும் கூற என்ன இருக்கிறது. நான் தானே அந்த அற்புதத்தைச் செய்ய வேண்டியவள்.

பாம்பு: இல்லை. அவனும் விரும்பி இச்சைப் பட வேண்டும். அவனுடைய விருப்பத்தையும் இச்சையையும் உனக்குக் கொடுக்க வேண்டும்.

ஈவ் : எப்படி?

பாமபு : அதுதான மபாய ... சியம். பேசாமலிரு, ஆதாம் வருகிறான்.

ஆதாம் : (வந்து கொண்டே) நம்முடைய குரலைத் தவிர்த்துத் தோட்டத்தில் வேறு குரல் உண்டா? நான் ஒரு புதிய குரலைக் கேட்டேன்.

ஈவ்; (எழுந்து அவனருகில் சென்று) ஆதாம், நினைத்துப் பார்! நாம் பேசுவதைக் கேட்டு நம் பாம்பும் பேசக் கற்றுக் கொண்டது.

ஆதாம் : (சந்தோஷமாக) அப்படியா? அவளைக் கடந்து கல்லருகிற் சென்று பாம்பை அணைத்துக் கொள்கிறான்.)

பாம்பு : (அன்பாக) அப்படித்தான், ஆதாம்.

ஈவ் : அதைவிட ஆச்சரியமான செய்தி கூறுகிறேன் ஆதாம். நாம் எப்பொழுதும் உயிரோடிருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆதாம் : (பாம்பின் சிரத்தை நெகிழ்ச்சியில் கீழே தள்ளிவிட்டு) என்ன? ஈவ், நீ என்னிடம் இதைப்பற்றி விளையாடாதே. ஒருநாள் முடிவு இருந்தால், என்னையே நான் எப்பொழுதும் சகித்துக் கொண்டிருக்கும் பொறுப்பிலிருந்து விடு பட்டால், இந்தத் தோட்டம் வேறொரு தோட்டக்காரன் பார்வைக்குச் சென்றால், நான் முடியா உறக்கத்தில் ஆழ்ந்து விடுவதா யிருந்தால், அது எவ்வளவு காலமாயிருந்தாலும் சரி, முடிவு வேண்டும்; ஏதாவதொரு முடிவு: நான் என்றும் இருப்பதை விரும்பவில்லை.

பாம்பு : நீ மறு பருவ காலம் வரையில்கூட உயிர்வாழ வேண்டிய அவசிய மில்லை. ஆனால் உனக்கு முடிவு என்பது இருக்காது.

ஆதாம் : அது இருக்க முடியாது.

பாம்பு : இருக்க முடியும்.

ஈவ்: அது இருந்தாக வேண்டும்.

பாம்பு: அது அப்படியேதான். என்னைக் கொன்று போடுங்கள். நீங்கள் கணக்கற்ற பாம்புகளைப் பார்ப்பீர்கள்.

ஈவ் : நான் வேறு ஆதாம்களையும், ஈவ்களையும் உண்டாக்குகிறேன்.

ஆதாம் : நீ வீணாகக் கதை பேசாதே. அந்தவிதமாக நடக்காது.

பாம்பு : நீயே பிறந்திருக்க முடியாது என்று எண்ணப் பட்ட நாளை நன்றாக எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் நீ தோன்றினாய்.

ஆதாம் : அது உண்மையாக இருக்கவேண்டும். (கல்லின் மீது உட்கார்ந்து கொள்கிறான்).

பாம்பு : நான் ஈவுக்கு இரகசியத்தைக் கூறுகிறேன். அவள் அதை உனக்கு அறிவிப்பாள்.

ஆதாம் : அந்த உண்மை! (வேகமாகத் திரும்புகிறான். அப்பொழுது பாதத்தில் ஏதோ ஒன்று குத்திற்று). ஓ!

ஈவ் : அது என்ன ?

ஆதாம் : (பாதத்தை தடவிக் கொண்டே) முள்ளொன்று, பக்கத்தில் பூனை காஞ்சோறி, இந்த முட்களைக் களைந்து எறிந்துத் தோட்டத்தை சுத்தமாக வைத்திருப்பதிலேயே என் கவனத்தைச் செலுத்திக் களைப்படைந்து விட்டேன்.

பாம்பு : அவை அவ்வளவு விரைவாக வளர்வதில்லை. உங்கள் பளுவை இறக்கி நிரந்தரமாக உறங்கச் செல்வதற்குள் அவை தோட்ட முழுவதும் பரவி விடாது. உங்களுக்குப் பின்னால் வரும் ஆதாம்கள் அவற்றை கவனித்துக் கொள்வார்கள். நீங்கள் அதைப்பற்றி அனாவசியமாகக் கவலை கொள்ள வேண்டாம்.

ஆதாம் : எப்பொழுதும் இல்லாமலிருப்பது எவ்வளவு நல்லது! சரி. நீ இப்பொழுது உன் இரகசியத்தைக்கூறு.

ஈவ் : (வெறுப்புடன்) ஆண் பிள்ளையைப்போல் பேசுகிறாய். நாம் எப்பொழுதும் உயிர்வாழ வேண்டியதில்லை என்று உணர்ந்ததும் இப்பொழுது நமக்கு முடிவு வந்து விட்டதுபோல் பேசுகிறாய். இந்த முட்களைக் களையா விட்டால் அவை நாம் பாராமல் நடந்தால் காலைத் துளைத்து விடும்போலிருக்கிறதே.

ஆதாம் : ஆம் சில தான், நான் அவற்றை நாளைக்குக் களைந்து எறிந்துவிடுகிறேன்.

பாம்பு : (கல கல வென்று நகைக்கிறது)!!!

ஆதாம் : நீ நன்றாக ஓசை செய்தாய். அது எனக்குக் கேட்க விருப்பமாயிருக்கிறது.

ஈவ் : மற்றொரு முறை ஏன் அதைச் செய்யக்கூடாது?

பாம்பு : ஆதாம் புதிய தொன்றை சிருஷ்டித்திருக்கிறான். அவன் 'நாளையைக் கண்டுபிடித்தான். நீ நாள் தோறும் புதியதாக உண்டாக்

டிக் கொண்டிருப்பாய். எனவே நீங்கள் பலூ என்று கருதிய நிலைத்த வாழ்வு உங்களிட மிருந்து அகன்று விடுகிறது. என்ன ?

ஈவ் : நிலைத்த வாழ்வு. அது என்ன ?

பாம்பு : என்றும் அழியாது வாழ்வதைக் குறிக்கும் என் னுடைய சொல்.

ஈவ் : பாம்பு அழகான வார்த் தையைக் கண்டு பிடித்தது.

ஆதாம் : நாளைக்குக் காரியங் யளைச் செய்வதற்கு எனக்கு ஒரு வார்த்தை கற்றுக்கொடு. அது புதிய நன்மை பயக்கும் உற்பத்தி.

பாம்பு : காலங் கடத்துதல்.

ஈவ் : அது இன்பம் பொருந்திய சொல். எனக்குப் பாம்பின் நா இல்லையேஎன்று வருந்துகிறேன்.

பாம்பு : அதுவும் முடியும். முடி யாததென்றொன்றில்லை.

ஆதாம் : (பயத்தால் துள்ளிக் குதித்து) ஓ !

ஈவ் : என்ன அது ?

ஆதாம் : என் ஓய்வு, வாழ்வி லிருந்து தப்பிக்கும் வழி!

பாம்பு : சாவு, அதுதான் அந்த வார்த்தை.

ஆதாம் : காலங் கடத்துதலில் பல இன்னல்கள் இருக்கும்.

ஈவ் : என்ன இன்னல்கள் ?

ஆதாம் : நாளை வரை சாவை ஒத்திப் போட்டால், அப்பால் நான் இருக்கவே மாட்டேன். நாளை என்று ஒன்று கிடையாது, இனி மேனிலும் வராது.

பாம்பு : நான் சூதன். மனிதன் என்னைவிட ஆழமானவன். இல் லாததில்லை என்பதைப் பெண் அறிந்து கொண்டாள். நாளை என்பதொன்றில்லை என்று ஆண் மகன் அறிந்து கொண்டான். நான் அவர்களை வணங்கு கிறேன்.

ஆதாம் : நான் இறப்பதானால் அதற்கு ஒரு நாளைக் குறிப்பிட வேண்டும். அது நாளை அல்ல. நான் எப்பொழுது இறப்பது ?

ஈவ் : நான் மற்றொரு ஆதாமை சிருஷ்டித்த பின் நீ இறக்கலாம். அதற்கு முன்னல்ல. அதற்கப் புறம் நீ எப்பொழுது விரும்பு கிறாயோ அப்பொழுது. (அவள் எழுந்துசென்று மரத்தின் மீது சாய்ந்து கொள்ளுகிறாள்).

ஆதாம் : அப்பொழுதும் அதற்கு யாதொரு அவசரமான அவசியமில்லை.

ஈவ் : நாளைவரையில் நீ அதனை ஒத்திவைப்பாய் என்று கருது கிறேன்.

ஆதாம் : நீ ? ஒரு புதிய ஈவை சிருஷ்டித்ததும் நீ இறந்து விடு வாயா ?

ஈவ் : நான் எதற்கு இறக்க வேண்டும் ? நான் தொலைய வேண்டும் என்று நீ விரும்பு கிறாயா ? நான் எழுந்திருந்து நடமாடினால் எங்கேயாவது மான் குட்டியைப்போல்விழுந்து இறந்துவிடுவேன் என்றெண்ணி இருந்த இடத்தை விட்டு நகர வேண்டாமென்று சற்று முன்பு நீ கூறினாய். இப்பொழுதோ என்னைப்பற்றிக் 'கவலை யற்றுப் பேசுகிறாய்.

ஆதாம் : இப்பொழுது அது அவ்வளவு பெரிதாக இல்லை.

ஈவ்: (கோபத்துடன் பாம்பைப் பார்த்து.) தோட்டத்திற்குள் நீ கொண்டு வந்த சாவு மிகக் கொடியது. நான் இறக்க

வேண்டுமென்று ஆதாம் கூறு கிறன்.

பாம்பு : (ஆதாமை நோக்கி) நீ அவள் சாவவேண்டு மென்று விரும்புகிருயா ?

ஆதாம் : இல்லை. நான்தான் முதலில் இறக்க வேண்டியவன். ஈவ், எனக்கு முன்னுல் இறக்கக் கூடாது. நான் தனித்து நிற் பேன்.

ஈவ் : புதிய ஈவ்களில் ஒருத்தி உனக்குக் கிடைப்பாள் ஆதாம். அது உண்மைதான். அவர்கள் உன்னைப்போல் இருக்க மாட் டார்கள். இருக்க முடியாது. அவர்களுக்கு அதே நினைவுகள் இருக்காது. அவர்கள்—அதற்கு ஒரு சொல் எனக்குக் கிடைக்க வில்லை.

பாம்பு : வேற்றவர்.

ஆதாம் : ஆம். அது ஒரு கடின மான வார்த்தை. வேற்றவர்.

ஈவ் : புதிய ஈவ்களும் ஆதாம் களும் தோன்றினுல் நாம் அன்னி யர்கள் இருக்கும் தோட்டதில் வசிப்போம். நாம் ஒருவருக்கு மற்றவர் அவசியம். (அவனுக் குப் பின்னுல் வந்து அவன் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்ளு கிருள்) அதை மறக்காதே, ஆதாம், மறக்காதே.

ஆதாம் : நான் அதை எப்படி மறப்பேன் ? நானே முதலில் அதைப்பற்றி எண்ணியவன்.

ஈவ் : நானும் எதைப்பற்றியோ நினைத்தேன். மான் குட்டித் துள்ளி விழுந்து இறந்து விட் டது. நீயும் மெல்ல என் பின் னுல் வந்து என்னைத் தள்ளிவிடு. (அவள் உடனே அவன் தோள் மீது பாய்ந்து அவனை மல் லாக்கத் தள்ளி விடுகிருள்.) நான் இறந்து விடுவேன் நான் உன்னுல் இறக்கக் காரணம் இல்லை என்றுல் நான் தூங்க முன்வர மாட்டேன்.

ஆதாம் : உன்னை இறக்கச் செய்வதா ? (நடுங்குகிருன்) என்ன பயங்கரமான எண்ணம்

பாம்பு : கொல்லுதல் ! இது தான் அந்த வார்த்தை.

ஈவ் : புதிய ஆதாம்களும் ஈவ் களும் நம்மைக் கொன்றுலும் கொன்று விடுவார்கள். நான் அவர்களை உண்டாக்க மாட் டேன். (கல்லின்மீது உட்கார்ந் படி அவன் கையை வலித்துத் தன் கையோடு அணைத்துக் கொள்கிருள்).

பாம்பு : நீ செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் முடிவு உண்டாகும்

ஆதாம் : இல்லை. அவர்கள் நம்மைக் கொல்ல மாட்டார்கள். அவர்கள் நம்மைப் போலவே எண்ணுவார்கள். தோட்டத்தில் இருக்கும் குரல் நமக்குக் கூறியதைப்போல் அவர்களுக் கும் கொல்லக் கூடாதென்று கூறும்.

பாம்பு : தோட்டத்தில் கேட்ட குரல் உன்னுடைய குரலே.

ஆதாம் : அது அப்படித்தான் ; அல்ல. அது என்னை விட உயர்ந் தது. நான் அதனில் ஒரு பிரிவே.

ஈவ் : உன்னைக் கொல்ல வேண் டாமென்று அந்தக் குரல் எனக்கு கூறவில்லை. என்றுலும் நீ எனக்கு முன் இறப்பதை நான் விரும்ப வில்லை. அதைக் கூற எனக்கு ஒரு குரல் தேவையில்லை.

ஆதாம் : (வேதனை யோடு தன் கரங்களை அவள் தோள்களின் மீது போட்டுக் கொண்டு) அப் படிக் கில்லை, அதைச் சொல்ல ஒரு தனி குரல் வேண்டுவதில்லை.

நம்மிருவரையும் ஒன்று பிணைக்கிறது. அதைக் கூறும் சரியான சொல்எனக்குத் தெரியவில்லை.—

பாம்பு : அன்பு அல்லது பற்று,

ஆதாம் : அவ்வளவு பெரிய பொருள் குறிக்க இது சிறிய சொல்.

பாம்பு : (நகைக்கிறது)! ! !

ஈவ் : (பாம்பின் பக்கம் திரும்பி) மறுபடி நெஞ்சைக் கலக்கும் அந்தக் குறல்! அதைச் செய்யாதே. ஏன் நீ அதைச் செய்கிறாய்.

பாம்பு : அவ்வளவு சிறியதற்கு 'அன்பு' என்ற சொல் மிகச் சிறியதாகி விடும் சீக்கிரத்தில். அது சிறிய சொல்லானாலும் மிகப் பிரியமாக இருக்கும்.

ஆதாம் : (வாயை அசை போட்டுக் கொண்டே) நீ என்னைக் கலக்கிவிட்டாய். என் பழைய துன்பங்களே எனக்குப் போதுமானவை. ஆனால் அவை எளியவை. நீ கூறும் அற்புதங்கள் எனக்குச் சாவை வருவிப்பதற்குள் என்னைப் பல தொல்லைகளில் சிக்க வைக்கும் என்று கருதுகிறேன். நிலைத்த வாழ்வு என்ற பாரம் என்னை வருத்தியது. ஆனால் என் மூளை கலங்கவில்லை. நான் ஈவை நேசித்தேன் என்றுணரா விட்டாலும், அவள் என்னை நேசிக்காமல் வேறொரு ஆதாமை நேசித்து நான் சாவதை விரும்புவாள் என்று நான் எண்ண வில்லை. அத்தகைய அறிவுக்கு என்ன என்று கூற முடியுமா?

பாம்பு : பொறாமை.

ஆதாம் : மிகப் பயங்கரமான சொல்.

ஈவ் : (அவனைக் குலுக்கி) ஆதாம், நீ கவலைகொண்டிருக்கிறாய். அதிகமாக மூளைக்கு வேலை கொடுக்கிறாய்.

ஆதாம் : (கோபமாக) எதிர்காலம் அவ்வளவு நிலையற்றதாயிருக்கும் பொழுது நான் எப்படி கவலை கொள்ளாமலிருக்க முடியும். பற்று நிலையற்றது. இந்தப் புதிய துன்பத்திற்கு என்ன பெயர்.

பாம்பு : அச்சம் அல்லது பயம்.

ஆதாம் : அதற்கு பரிகாரம் உண்டா?

பாம்பு : நம்பிக்கை.

ஆதாம் : அது என்ன?

பாம்பு: என்ன நிகழப் போகிறதென்பது தெரியாத போது அது பழைய நிலையை விடச் சௌகரிய மற்றதென்று நீ நினைக்கமாட்டாய். அது தான் நம்பிக்கை. எனக்கு நிலையானது வேண்டும்.

ஆதாம் :(கோபத்தோடு எழுந்திருக்கிறான்) அதை எனக்கு அளி. இன்றேல் அடுத்த முறை நீ தூங்கும் பொழுது உன்னைக் கொன்று விடுவேன்.

ஈவ் : (பாம்பை அணைத்துக் கொண்டு) என் அழகுள்ள பாம்பே! முடியாது! நீ அப்படிப் பட்ட கொடுமையை எப்படித் தான் நினைத்தாயோ?

ஆதாம் : அச்சம் என்னை எதையும் செய்யத் தூண்டும். பாம்பு எனக்கு பயங்காட்டிற்று. நிலையானதை அது எனக்கு அளிக்கட்டும். இல்லாவிட்டால் எனக்கும் பயப்பட்டுச் செல்லட்டும்.

பாம்பு: எதிர்காலத்தை உன்னுடைய மனோ சக்தியால் கட்டுப் படுத்தலாம். ஒரு சூள் செய்து கொள்.

ஆதாம் : சூள் என்பது என்ன?

பாம்பு : நீ இறப்பதற்கு ஒரு நாள் குறித்துக்கொண்டு அன்று

இறக்க உறுதி செய்து கொள், அப்பொழுது சாவது உண்மை யற்றதாயில்லாமல் உறுதியாகி விடும். ஈவ் நீ சாகும்வரை உன்னையே நேசிப்பதாகச் சூள் செய்து கொள்ளட்டும். நேசம் என்பது நிலையற்றதாகாது.

ஆதாம் : ஆம், அது சரியானது தான். எதிர்காலத்தை அது கட்டுப் படுத்தும்.

ஈவ் : (அதிருப்தியோடு பாம்பின் பக்கமிருந்து திரும்பிக் கொண்டு) ஆனால் அது நம்பிக்கையைத் தகர்த்துவிடும்'

ஆதாம் : (கோபத்தோடு) பேசாதே, பெண்ணே, நம்பிக்கை மிகக் கொடுமையானது; சுகமும் கொடுமையானதே ; நிச்சயம் நயமானது.

பாம்பு : கொடுமையானது என்பது என்ன? நீ ஒரு புதிய சொல்லைக் கண்டு பிடித்தாய்.

ஆதாம்: நான் எதைச் செய்யப் பயப்படுகிறேனே அது கொடியது. என்னைக் கேள். ஈவ் ; நீயும் கேள் பாம்பே. என்னுடைய உறுதி மொழியை நன்ருக மனதில் நான் இன்னும் பதிய வைத்துக்கொள். ஆயிரம்ஆண்டுகள் வாழ்ந்திருப்பேன்.

பாம்பு : ஆண்டுகள். ஆண்டுகள்.

ஆதாம் : நான் ஆயிரம் ஆண்டுகள் உயிருடன் இருப்பேன். அதற்குப் பிறகு நான் பொறுக்க மாட்டேன். நான் இறந்து ஒய்வு பெற்றுக்கொள்வேன். நான் உயிர் வாழ் காலம் முழுவதும் ஈவைத் தவிர்த்து வேறு பெண்ணை விரும்ப மாட்டேன்.

ஈவ் : ஆதாம் ! தன் சொல்லைக் காப்பாற்றினுல் நானும் அவன் இறக்கும் வரை வேருெரு ஆடவனை விரும்பேன். நீங்கள் கலியாணத்தை கண்டீர்கள்.

பாம்பு : மற்ற பெண்களுக்கில்லாமல் அவன் உனக்கு கணவன் முறையாகிருன். நீயும் மற்ற ஆடவனுக்கில்லாத உறவாக அவனுக்கு மனைவியாகிருய்.

ஆதாம்: (அவள் பக்கம் நெருங்கி) கணவனும் மனைவியும்.

பாம்பு : (நகைக்கிறது) ! ! !

ஈவ் : (அவன் பிடியிலிருந்து நழுவி) அந்த அருவறுக்கத்தக்க ஒலியை இனிச்செய்யாதே நான் கூறுகிறேன்.

ஆதாம் : அவள் பேச்சைக் கேட்காதே. அந்த ஒலி நன்ருக இருக்கிறது. அது என் இருதயத்திற்கு சாந்தி யளிக்கிறது. நீ இன்னும் ஒரு சபதமும் செய்ய வில்லை நீ என்ன சபதம் செய்து கொள்ளப்போகிருய் ?

பாம்பு : நான் ஒரு சபதமும் செய்வதில்லை. நான் வருவதை ஏற்றுக்கொள்வேன். வாய்ப்பு.

ஆதாம் : வாய்ப்பு, அதன் பொருள் என்ன ?

பாம்பு : நான் நிலையுள்ளதற்கு அச்சப்படுவதைப் போல் நீ நிலையற்றதற்கு அச்சப்படுகிருய் என்று அர்த்தமாகிறதல்லவா ? நான் எதிர்காலத்தைக் கட்டுப் படுத்தினுல் என் உளச் சக்தியைக் கட்டுப் படுத்துவேன், என் விருப்பத்தைக் கட்டுப் படுத்தினுல் உண்டாக்குவதனை நான் கட்டுப்படுத்துகிறேன்.

ஈவ் : தடைப்படக் கூடாது. நான் அவசியம் உண்டாக்குவேன். உண்டாக்குதல்! அப்படிச் செய்வதில் நான் சிதைந்தாலும் கெடுதலில்லை.

ஆதாம் : இருவரும் பேசாமலிருங்கள். நான் எதிர்காலத்தைக் கட்டுப் படுத்துகிறேன். நான் அச்சத்தைத் தவிர்ப்பேன். (ஈவிடம்) நாம் சபதம் செய்தாய் விட்டது. நீ உண்டாக்கினால் சபதத்துக்குக் கட்டுப்பட்டு உண்டாக்கு. பாம்பின் வார்த்தையை இனிமேல் நீ கேளாதே. வா (என்று கூந்தலைப் பிடித்து அவளை அழைத்துச் செல்ல எத்தனிக்கிறான்.)

ஈவ் : மூடா, என்னை விட்டு விடு அது இரகசியத்தை இன்னும் எனக்குக் கூறவில்லை.

ஆதாம் : (அவளை விடுவித்து) ஆம். மூடன் என்றால் என்ன பொருள்.

ஈவ் : எனக்குத் தெரியாது. என் வாயில் அச் சொல் தானாக வந்தது, நீ மறதியால் கவலைப்பட்டு அச்சத்தோடிருக்கும் பொழுது நீ மூடனாக இருக்கிறாய். இப்பொழுது பாம்பு சொல்வதைக் கேட்போம்.

ஆதாம் : இல்லை, அதைக் கண்டால் எனக்குப் பயமாயிருக்கிறது. அது பேசும் பொழுது என் காலடியில் உள்ள பூமி பிளந்து விடுவது போலிருக்கிறது. நீ இருந்து அது கூறப் போவதைக் கேட்கப் போகிறாயா ?

பாம்பு : (நகைக்கிறது) ! ! !

ஆதாம்: அந்த நகை, பயத்தைப் போக்கி விடுகிறது. (அச்சமயம்) பெண்ணும் சர்பமும் ரகசியம் பேசப் போகிறார்கள், (அவன் தனக்குள்ளே முதல் தடவையாகச் சிரித்துக் கொள்ளுகிறான்.)

ஈவ் : இப்பொழுது அந்த ரகசியம் (கல்லின் மேல் உட்கார்ந்து

பொடியில் சிறந்தது

பட்டணம் பொடியே!

அதனிலும் சிறந்தது

அப்பாதுரைப் பொடியே!

●

காரம், குணம், மணம்

நிறைந்தது

இப் பொடியை உபயோகிக்கும் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள், ஏஜண்டுகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

●

ஆ. அப்பாதுரை முதலியார் & சன்ஸ்,

மூக்குத்தூள் வியாபாரம்,

55, ஆச்சாரப்பன் தெரு,

த. பெ. 189, சென்னை - 1.

அதோ போகிறாள்

(வி. புனிதவதி)

வசந்த காலத்து இளந்தென்றல் மெல்ல வீசிக்கொண்டிருந்தது. மாடியில் வானத்தை நோக்கி நின்று கொண்டிருந்த சேகருக்குப் பால் போல் குளிர்ந்த ஒளியை வீசிக் கொண்டிருந்த சந்திரிகை ஒருவித இன்ப உணர்ச்சியையும் அளிக்கவில்லை. அவன் மனதில் அன்று ஏனோ எண்ணற்ற எண்ண அலைகள் சூழ்ந்து கொண்டிருந்தன! கொந்தளித்து எழுந்த மனக் கொதிப்பை ஒருவாறு அடக்கிக் கொண்டு பெருமூச்செறிந்த வண்ணம் கீழே வேலையாக இருந்த தன் மனைவி சுகுணாவை இரைந்து கூப்பிட்டான்.

சுகுணா தன் கணவனின் கோபக் குரலைக் கேட்டு, பயந்து 'இதோ, ஒரு நிமிஷத்தில் வந்துவிட்டேன்' என்றாள்.

சேகர், “கூப்பிட்டால் உடனே வராமல் என்ன வேலை செய்கிறாய் அங்கே? யாருடன் அப்படிப் பேசிக்கொண்டிருக்கிறாய்?” என்று கடிந்து கூறினான்.

சுகுணா கீழிருந்தபடியே 'யாருமில்லை; ஓர் ஏழைப் பெண் ஒரு பிடி சோறு கேட்டாள்' என்று சொல்லும்போதே, 'சரி, சரி, சீக்கிரம் போட்டுவிட்டு வா' என்றான்.

மீண்டும் சேகரின் மனதில் எண்ணத்திரள் மேகம்போல வந்து குவிய, மாடித் தாவாரத்தின் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு வானத்தையே நோக்கி நின்றான்.

நீலவானில் பொன்மயமாக ஒளிவிடும் அழகிய விண்மீன்களின் கூட்டம் மின்னுவது ஏனோ அவனைப் பார்த்துக் கண்சிமிட்டி நகைத்துக் கேலி செய்வதுபோன்று அவனுக்குத் தோன்றியது. அங்கே அவன் அரைமணி நேரத்திற்கு அதிகமாகவே நின்றிருப்பான். அதுவரையிலும் சுகுணா அங்கு வந்தபாடில்லை. 'என்னதான் செய்கிறாளோ, போய்தான் பார்க்கலாமே' என்று கீழே இறங்கி வந்தான்.

சுகுணா வாசற்படிமீது சாய்ந்த வண்ணம் கையில் ஒரு அலுமினியத்தட்டை வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். அவள் முன்னால் ஒரு இளநங்கை கொடிபோன்று நைந்த உருவத்தோடு எளிய ஆடை அணிந்து நின்றிருந்தாள். அவள் நெற்றியில் சுருண்டு தவழ்ந்து கொண்டிருந்த அழகிய கேசம்

கொண்டு பாம்பை அணைத்துக் கொள்கிறாள். பாம்பு அவள் காதில் ஏதோ ரகசியம் கூறுகிறது).

[[illegible]வின் முகம் பிரகாசமடைகிறது. கடைசியில் முகத்தில் விகாரமும் வெறுப்பும் தோன்றுகிறது. அவள் முகத்தைக் கையில் மறைத்துக் கொள்கிறான்.]

(தொடரும்)

அவளுக்குத் தனி அழகைத் தருவதாகத் தோன்றியது. அவள் அந்தப் எளிய தோற்றத்திலும் அளவற்ற சாந்தியும், உறுதியும் கொண்டுள்ளவள்போலக் காணப்பட்டாள்.

சேகர் கீழே இறங்கி அங்கு வருவதற்குள் அப்பெண்மணி சுகுணாவிடம் விடைபெற்றுச் செல்லத் தொடங்கிவிட்டாள். சுகுணாவும் திரும்பினாள்.

சேகர், "உன்னை எவ்வளவு நேரமாச்சு கூப்பிட்டு? நீ ராணி போல இங்குஎன்ன அப்படி அந்தப் பிச்சைக்காரியுடன் பேசிக்கொண்டிருந்தாய்?" என்று கோபமாகக் கேட்டான்.

அதற்கு சுகுணா, "பாராயிருந்தாலும், எளிய ஆடை அணிந்து, அதிலும் கைநீட்டிச் சோறு கேட்டாலே பிச்சைக்காரிதானா? எனக்கு என்னவோ அவளைப் பார்த்தால் பிச்சைக்காரியைப் போலத் தோன்றவில்லை. ஆகவேதான் நான் அவளைப் பற்றி விசாரித்தேன்" என்று பதிலளித்தாள்.

சேகர்: விசாரித்தாய். அவள் உன்னிடம் இல்லாததும் பொல்லாததும் கூறி, பொய்யை அளந்து கொட்டி உன்னை ஏமாற்றிவிட்டுப் போயிருக்கிறாள். என், அப்படித் தானே?

சுகுணா: ஆமாம், நீங்கள் யாரைத்தான் அப்படிச் சொல்லவில்லை? அப்படி ஏதாவது நான் மறுத்துச் சொன்னாலோ, "நீ என்னை ஒரு சாதாரண மனிதனாக எண்ணி எதிர்த்துப் பேசிவிடுகிறாய் என்னை அப்படி எண்ணாதே. என்னைவிட உனக்கொன்றும் அதிகம் தெரிந்திருக்க முடியாது" என்பீர்கள். அவள் பார்ப்பதற்கு அப்படியிருந்தாலும், படித்த பெண்.படித்து என்ன கண்டாள்? பாபம் அவள் விதி அவளைச் சதி செய்து படுகுழியில் தள்ளிவிட்டது.

சேகர்: ஏன்? அவளுக்கு அந்த நிலை வந்ததற்குக் காரணம்?

சுகுணா: விவரமாகச் சொல்லுகிறேன்; மாடிக்குப் போவோம். வாருங்கள்.

இருவரும் மாடிக்குச் சென்று வெட்ட வெளியில் நிலவில் அமர்ந்தனர்.

"உம். சொல்லு கதையை" என்றான் சேகர்.

"சொல்லுகிறேனே. அவள் B. A. வகுப்பு வரை படித்தாள். அதற்குள் அவள் தாயார் இறந்தவே குடும்பமே கலகலத்து விட்டது."

"ஏன், அவள்தான் B. A. வரை படித்தவளாச்சே. ஏன் இப்பொழுது பிச்சை எடுக்கிறாள்?"

"அப்பப்ப, சொல்லுவதற்குள் அப்படித் துடித்தால் என்னால் சொல்லமுடியாது போங்கள். நான் தான் சொன்னேனே, அவள் பிச்சைக்காரியல்ல என்று. இதோ பாருங்கள், நான் அவளைப் பற்றிச் சொல்லும்பொழுது குறுக்கிட்டு ஒன்றும் கேட்கக்கூடாது, என்ன? ..."

"சரி, சரி. மேலே சொல்லு."

"அவள் ஒரு ஏழைத் தொழிலாளியின் மகள். அவளுக்கு ஒரு தங்கையும் ஒரு தம்பியும் உண்டு.

மிகவும் ஏழைக் குடும்பம். அவளுக்கு முன்வந்து உதவி செய்யக்கூடிய உறவினரும் கிடையாது. இப்பொழுது அவள் தங்கையைப் பார்க்கப் போகிருள்.

"அவள் தங்கை எங்கே இருக்கிருள்? இவள் எங்கிருந்து போகிருள்?"

"அவள் தங்கை, ரமணி இப்பொழுது அரவங்காட்டிலிருக்கிருளாம். தன் நண்பர் ஒருவருக்கு ரமணியை மணம் செய்வித்தாளாம். இப்பொழுது ரமணி கணவன் வீட்டில் இருக்கிருள். அவளுக்கு உடம்பு சரியில்லையாம். அவளைப் பார்ப்பதற்காக இப்பொழுது அரவகாட்டிற்குப் போகிருளாம். அவள் தம்பி ஒரு ஆலைத் தொழிலாளியாம். அவனும் கலியாணம் செய்துகொண்டு மாமியார் வீட்டோடு தங்கிவிட்டாளும்.

"தங்கைக்கும் தம்பிக்கும் மட்டும் கலியாணங்களை முடித்துவிட்டு வாழ்க்கையிலேயே வெறுப்புக் கொண்டு கலியாணம் செய்துகொள்ளாமல் இவள் மட்டும் தன் தந்தையோடு இருந்தாளாம். அவள் தந்தையும் திடீரென்று இறக்கவே அனதை போலாளுள்."

"சீ, இதென்ன சுகுண! வேடிக்கையா செய்கிருய்! என்ன தானிருந்தாலும் அக்காவுக்குக் கலியாணம் ஆகாமல் தங்கைக்கும் தம்பிக்கும் மணம் நடக்குமா?"

"அதுதானே பெரிய கதை. அவள் படிக்கும்போது தன்னுடன் படிக்கும் மாணவன் ஒருவன் அவளைக் காதலித்தாளும். அவளும் அவனுடைய நயமான அடுக்குச் சொற்களில் மயங்கி, அவனுடன் வாழ ஒப்புக்கொண்டாளாம். இருவரும் மிக மிக அன்பாகத் தான் இருந்தனராம். இவள் ஏழை. அவனே பணக்காரன். விடுமுறையில் திடீரென்று ஒரு கடிதம் வந்தாம், அவள் காதலனிடமிருந்து. அவன் என்ன எழுதியிருந்தான் தெரியுமா? தனக்குப் பல சங்கடங்கள் நேர்ந்ததென்றும், தன் தந்தை பிடிவாதமாகப் பணக்காரப் பெண் ஒருத்தியை மணக்கச் சொல்லியதால், அவர் விருப்பப்படி அந்தப் பெண்ணை மணந்துகொண்டதாகவும், அவ்வாறு கலியாணம் செய்துகொள்ளாவிட்டால், தான் மேற்கொண்டு படிக்க முடியாமல்போய் விடும் என்றும், இவள் விரும்பினுல் தன்னுடன் மணமின்றித் தங்கியிருக்கலாம் என்றும் எழுதியிருந்தாளும், அந்த மகா மேதாவி.

"நீங்கள் தான் சொல்லுங்களேன். காதலிக்கும்போது அவள் மலரின் தேன் - காதலின் கனி - உலகமே அவள் - அவளன்றி உயிர் வாழான். இப்பொழுது ஏழை - பணக்காரி என்ற வேறுபாடு பார்க்கிருன் பணத்தோடு ஒரு பெண் வந்துவிட்டால், உலகமாகவே தோன்றிய காதலி ஏழையாகத் தோன்றுகிருள். எப்படியிருக்கிறது. நடத்தை சீ, இந்த ஆண்கள் கூட்டமே இப்படித்தானே? முதலில் நல்ல வாசனை வீசிக்கொண்டிருக்கும் மலரை நாடிவரும் வண்டுகள், தன் இனிய ரீங்காரத்தினுல், மலரை மயங்கச் செய்து, அதிலுள்ள தேனை உறிஞ்சிய பிறகு அம்மலரை

விட்டுப் பறிப்பது போலத்தான் சில ஆடவரின் செயல்.

“திடீரென்று வந்த கடிதத்தைக் கண்ட அவள் திடுக்கிட்டாள். அவளோ உயர்குலப் பெண். நல்ல சீரிய பண்புகள் நிறைந்த தமிழ் நாட்டில் பிறந்த பெண். முதலில் அலறினாள், கதறினாள். ஆனால், ‘புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?’ தன் குலப் பெருமையையும், பெற்றோரின் ஒழுக்கமான வாழ்க்கையையும் எண்ணி, அற்ப இன்பத்திற்காக அவன் கூறியபடி தாழ்வான முறையில் அவனுடன் வாழ விரும்பவில்லை.

“தமிழர் பண்பைக் கெடுக்க விரும்பாத அப்பெண் திலகம், அந்த சிறந்த மனிதனை மறந்தாள். தன் உயிரை மாய்ப்பது தவறெனக் கருதி, கடமைக்காக வயிறு வளர்க்க வேண்டி ஒரு தொழிற்சாலையில் வேலைக்கு அமர்ந்தாள். இதுவரையில் இந்த ஓராண்டாகத் தன் சொற்ப வரும்படியில் தன் வாழ்க்கையையும் நடத்திக்கொண்டு, அநாதைகளுக்கும் உதவிசெய்து வந்தாள். இம்மாதிரியான நிலையில்தான் அவள் தங்கையிடமிருந்து ஒரு கடிதம் வந்ததாம். அதில், தான் கொடிய நோயினால் அவதியுறுவதாகவும், தன் அக்காவை கண்டிப்பாகப் பார்த்தேயாக வேண்டும் என்றும் எழுதியிருந்ததாம். இதைக் கண்ட அவள், தன்னருமைத் தங்கையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் தூண்ட, தன் முதலாளியிடம் சென்று, தன் தங்கையைப் பார்த்து வர இரண்டு நாள் விடுமுறையும், தன் சம்பளத்தில் சிறிது பணமும் கெஞ்சிக் கேட்டாள். முடியுமா? இந்தக் காலத்தில் சத்தியம் ஏது? நேர்மை எங்கே? ஏழைப்பாட்டாளி மக்களின் கூக்குரலைக் கேட்கத்தான் ஆளேது? பணக்கார வர்க்கத்தின் கொட்டம் தான் தலைவிரித்தாடுகிறதே! அந்த லோபியான முதலாளி அவளிடம் கொஞ்சமும் இரக்கங்கொள்ளாமல் கண்டிப்பாக மறுத்துவிட்டான்.

“என்ன செய்வாள் பேதை. இரத்தபாசம் பிடித்திழுக்க, எப்படியாவது தங்கையைக் காண்பதென்று துணிந்து, தன் காதிலிருந்த கம்மலை விற்றாள். அதில் கிடைத்த பணம் ரயில் செலவுக்குத்தான் போதும். அவளோ அடுத்த கிராமத்திலிருந்து நடந்து வருகிறாள். பசி காதையடைக்கவே தன் தங்கையைக் காணும் வரையிலாவது உயிருடனிருக்கவேண்டுமே என்று வழியில் நம் வீட்டில் ஒரு பிடி சோறு கேட்டாள். ஐயோ, பாவம். அவள் விதி அப்படி!” என்று பரிதாபத்துடன் ஒரு குட்டிப்பிரசங்கம் செய்தாள்.

இதுவரையில் தன் மனக் கொதிப்பையும் கலக்கத்தையும் ஆத்திரத்தையும் சமாளித்து அடக்கிப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த சேகரன், “சொன்னதெல்லாம் இருக்கட்டும். ‘அவள்’ ‘அவள்’ என்கிறாயே, அந்த ‘அவள்’ தான் யாரோ? அவள் பெயரென்ன?” என்று கேட்டான்.

“அவளா, அவள் பெயர் ரஜினி” என்றாள்.

திடீரென்று மூன்று வருடங்களுக்கு பிறகு 'ரஜினி' என்ற பெயரைக் கேட்டதும் மிகவும் பதைத்து எழுந்தான். 'ஐயோ, என் அருமை ரஜினியா இந்தக் கதிக்கு ஆளானாள்!' என்று கதறியவாறு மாடியை விட்டிறங்கி தெருவிற்கு ஓடினான். ஆனால், ரஜினி அதற்குள் அந்த நீண்ட தெருவைக் கடந்து திரும்பிவிட்டாள்.

தன் மனைவியைத் துரிதப்படுத்தி, சேகரன் பித்தனைப்போல் ஸ்டேஷனுக்கு ஓடோடியும் சென்றான். பயன் ஏது? பாபம்! இவன் அவ்வளவோ வேகமாகச் சென்று ஸ்டேஷனை நெருங்கியதும் வண்டியும் நகர்ந்துவிட்டது. என் செய்வான்!

அரவங்காட்டை ரயில் அடையும் பொழுது காலை ஐந்து மணி. ரஜினிக்கு ரயில் பிரயாணத்தாலும் மனக்கொதிப்பாலும், அதிர்ச்சியினாலும் இரத்தக்கொதிப்பு உண்டாகிவிட்டது. ரயிலை விட்டிறங்கி மெதுவாகத் தள்ளாடி தள்ளாடித் தன் தங்கை வீட்டை அடைந்தாள்.

கோலமிடத் தெருவிற்கு வந்த ரமணி, ரஜினியைப் பார்த்ததும் ஓடிவந்து 'அக்கா' என்று கட்டிக் கொண்டாள். ரஜினியோ ரமணி நல்லபடி இருப்பதைக் கண்டு திகைத்து நின்றாள்.

அதற்குள் ரமணியே, 'அக்கா என்னை மன்னித்துவிடுங்கள். நானும் அவரும் உங்களை வரச் சொல்லிப் பலமுறை வேண்டிக் கடிதம் எழுதினோம். நீங்கள் வரவில்லை. ஆகவே, இப்படி எழுதினால் ஒருவேளை வரலாமெனப் பொய்க்கடிதம் எழுதினோம்' என்று கூறுகையிலேயே, ரஜினி நிற்க முடியாது தள்ளாடி நிற்பதைக் கண்ட ரமணி அவள் உடம்பு அனல்போலக் கொதிப்பதையும், கண்கள் சிவந்து இரத்தம்போலக் காண்பதையும் கண்டு மெதுவாக அவளை உள்ளே அழைத்துச் சென்று படுக்கவைத்தாள். டாக்டர் வந்து உடம்பைப் பார்த்துவிட்டு, இரத்தக்கொதிப்பு மூளைக்கு ஏறிவிட்டதால் இனி அவள் பிழைக்க வழியில்லை என்று கூறிவிட்டார். இதைக் கேட்ட ரமணி துடித்துக் கதற ஆரம்பித்தாள்.

மாலை 3 மணிக்கு ரஜினி கொஞ்சம் கொஞ்சமாக இயற்கையோடு கலக்க ஆரம்பித்தாள். ரமணி அழும் குரலால் வீடே அதிர்ந்தது. அந்த நேரத்தில் சேகரன் பைத்தியக்காரனைப்போல், தன் மனைவியின்தொடர "ரஜினி! ரஜினி! ரஜினி எங்கே?" என்று அலறிக் கொண்டே ஓடிவந்தான்.

திடீரென்று சேகரனைக் கண்ட ரமணி ஆத்திரமடைந்து,

"ரஜினியா? அதோ போகிறாள்." காதல் உலகுக்கு கலங்கரை விளக்காக விளங்க அதோ போகிறாள். வஞ்சி நாட்டான் வஞ்சியான் என நம்பி உம்மால் வாழ்வை பாழாக்கப்பட்டு உங்கள் பெருமை வாழ்வை நீங்கி அதோ போகிறாள். தமிழ்நாட்டில் பிறந்த பெண், தமிழரின் சிறந்த ஒழுக்கத்தைச் சோதியாக்கி உலகில் ஒளி வீசச் செய்ய அதோ போகிறாள். வஞ்சகனை மறந்து, கற்பின் இலக

மாய், தன் தூய்மையை எடுத்துக் காட்ட. அதோ போகிறாள். உங்கள் பொய்க்காதலை உலகுக்கு எடுத்துக்காட்டி, உங்களால் ஏமாற்றப்பட்ட என் அருமை அக்கா அதோ போகிறாள் என்று தன் அடங்கா ஆத்திரத்தைக் கொட்டி, அலறி, முகத்தில் மோதி அறைந்து கொண்டு கீழே சாய்ந்தாள்.

எதிர்பாராத இந்த அதிர்ச்சியால் தாக்கப்பட்ட சேகரன் வேரறுந்த மரம்போல் ரஜினியின் படுக்கையின்மீது வீழ்ந்தான். அவன் வாய் மட்டும் "அதோ போகிறாள்" என்று முணுமுணுத்தது.

சேகரையே அசையாது பார்த்துக்கொண்டு நின்றிருந்த அவன் மனைவி, ரஜினியின் வாழ்க்கையைப் பாழாக்கியவன் தன் கணவனே என்றறிந்து கண் கலங்கினாள். அவள் இதழ்களிலும் 'அதோ போகிறாள்' என்ற சொற்கள் ஊர்ந்து சென்றன.

சிறுகதைப் போட்டி

தமிழ்நாட்டு மக்கள் பண்பை விளக்கும் வகையில் காதல், சோகம், கலை, வாழ்க்கை என்றவற்றுள் ஒன்றுவது பொருந்தும் முறையில் தமிழ்க்கலை அளவில் 4 பக்கங்களில் சிறு கதைகள் இம்மாத இறுதி வரையில் (30-11-48) ஏற்றுக்கொள்ளப்பெறும். இப்போட்டியில் கலந்துகொள்ள உரிமை உள்ளவர்கள் தமிழ்நாட்டு உயர்நிலைப் பள்ளிகள், உயர்தர தொடக்கப் பள்ளிகள் இவற்றில் பயிலும் மாணவ மாணவிகள். பள்ளியின் தலைமைஆசிரியர் கையொப்பத்துடன், மாணவர் தம் விண்ணப்பம் கதையோடு 30-11-48க்குள் நம் அலுவலகத்துக்கு வந்து சேரவேண்டும். கதை ஒன்றுக்கு நுழைவுக் கட்டணம் இரண்டு அணா. அதைத் தபால் பில்லையாக அனுப்பவேண்டுகிறோம். முடிவு ஆசிரியருடையது. முதன் மூன்றுக்குத் தக்க பரிசுகள் வழங்கப் பெறும். வேறு விபரம் வேண்டுவோர் நேரில் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

ஆசிரியர்



உரிமையின் பரிசு? காந்தி அடிகளின் பிரிவு (ஓர் அரிய தொகுப்பு நூல்) வெளியிட்டோர்:—தென் இந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.

உலகிடை ஒரு மணியாய் - ஒளி விளக்காய் விளங்கிய அண்ணல் காந்தியார் பிரிவினைக்குறிக்கும் பெருநூல் இது. அடிகளாரின் வாழ்க்கை, படங்களுடன் முதலில் இடம்பெற்றுள்ளது. உலகப் பேரறிஞர் அனைவரும் அடிகள் பற்றிக் கூறிய மொழிகள், 'துன்பமாலை' என்னும் தலைப்பில் தமிழ் நாட்டுப் புலவரும் பிறரும் பாடிய பாமாலை, எழுதிய கட்டுரைகள் அவரவர் படங்களுடன், 'இதழ்கள் வாடின' என்ற பிரிவில் தமிழ்நாட்டிலும், பிறநாட்டிலும் உள்ள ஏடுகள் அண்ணல் நீங்கிய வருத்தத்தை காட்டி எழுதிய மொழிகள் இத்தனையும் ஒருங்கே கொண்டு 300 பக்க அளவில் வெளிவந்துள்ள நூல் இது. அடிகளாரைப்பற்றி உலகம் கூறிய அத்தனையும் இது ஒன்றாக அடக்கி விட்டது எனலாம். எனவே அடிகளாரைப் போற்றுகின்ற அன்பர்கள் இந்நூலையும் உடன் போற்றுவர் என்பது உறுதி! இத்தகைய அருமுயற்சி பாராட்டத் தக்கதே!

நஞ்சன்கூடு பல்பொடி
I.D L.61, மெடிகேடட்
I.D.L.21 ச்யாவனப்ராச சுவாசகோச டானிக்
I.D.L.35 ஆல்மன்டைன் பலவிருத்தி, வீர்யவிருத்தி
I.D.L.72 ஹூார்டோன் ரக்தகோச டானிக்
வியாதி விபரம் எழுதித் தபால்மூலம் சிகிச்சை பெறலாம்
கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

Printed by [illegible] Rajammal at Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Published by G. Ramasami, 34, Vaithiyanatha Mudali Street, Chetput, Madras 10
Editor : A. M. Paramasivanandam, B.O.L., M.Litt. M.R.A.S.

அரிவையர்

அழகுக்கு

அழகு செய்யும்

அரிய

நகைகள்

P.A.ராஜு செட்டியார் & பிரதர்

போன்: 268 — கோயமுத்தூர் — தந்தி: ராஜா